Sales Reps. Welcome
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)
* INDEPENDENTLY OWNED AND OPERATED
For All your Real Estate & Investments Needs!
HomeLife GTA Realty Inc. Brokerage *
1711 McCowan Rd. #206, Toronto
145 Traders Blvd # 28, Mississauga
416.321.6969 / 905.712.2666



வாய், பல் சம்பந்தமான வைத்திய சேவைகளுக்கு
WALK IN DENTAL CLINIC
Dr. Iru Vijayanathan
குடும்ப பல்வைத்தியர்
416-264-3232
3150 Eglinton Ave. E.
Markham & Eglinton சந்திப்புக்கு அருகாமையில்



18 வது வருடத்தில்

# விளம்பரம்

VLAMBARAM™

416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com
416-282-4978

நதி 18 | பாலம் 05 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | MARCH 01, 2008



**சந்திரமௌலீஸ்வர சிவாலயம்**
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm, மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarboro.


# இலங்கைப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு முயற்சி எதுவும் முன்வைக்கப்படவில்லை



இலங்கையின் மனித உரிமை நெருக்கடிகள் மற்றும் அரசியல் ரீதியிலான முயற்சிகளில் போதிய முன்னேற்றகரமான அம்சங்கள் இல்லாமை குறித்து பிரிட்டன் கவலை கொண்டுள்ளது. அத்தோடு இலங்கை இனப்பிரச்சினைக்கு இராணுவ வழித் தீர்வு சாத்தியமேயில்லை என்றும் அது மீண்டும் வலியுறுத்தியுமிருக்கிறது. இலங்கையின் சகல சமூகங்களினதும் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய நீதியான தீர்வொன்று குறித்து புதிதாக சிந்திக்குமாறும் சர்வ கட்சிப் பிரதிநிதிகள் குழுவிற்கு பிரிட்டன் வேண்டுகோள் விடுத்துள்ளது.

பிரிட்டனின் வெளிநாட்டு மற்றும் பொதுநலவாய அலுவலகத்திற்கான இணையமைச்சர் மலோச் பிரவுண், பிரிட்டிஸ் பிரபுக்கள் சபையில் புதன்கிழமை இதனைத் தெரிவித்துள்ளார். சர்வதேச நெருக்கடி குழு பரிந்துரைத்ததுபோல இலங்கை விடயங்களில் அக்கறை கொண்ட அரசியல் ரீதியில் வலுவான சர்வதேசக் குழுவை ஏற்படுத்துவது குறித்துத் தீவிர கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பிரிட்டனின் பிரபுக்கள் சபையில் இலங்கை நிலைவரம் குறித்து எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளித்து உரையாற்றிய சமயமே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு: இலங்கையின் சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் அரசியல் தீர்வை உருவாக்குவதற்கான முயற்சிகளை நாங்கள் முழுமையாக ஆதரிப்பதுடன், பிரிட்டன் அதிகாரப் பகிர்வு குறித்த தனது அனுபவத்தை அதனுடன் பகிர்ந்து கொள்ளத் தயாராகவுள்ளதையும் தெரியப்படுத்த விரும்புகிறோம். மாகாண சபைகளுக்கு நிதி வழங்குவது, தமிழ் மொழிப் பயன்பாட்டிற்கான அதிகளவு முக்கியத்துவம் என்பவற்றை உள்ளடக்கியதாக அரசமைப்பிற்கான 13 ஆவது திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படுதல் ஒரு முன்னேற்றகர மான நடவடிக்கையென பிரிட்டன் கருதுகின்றது. இதேவேளை, இலங்கையின் சகல சமூகங்களினதும் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய நீதியான தீர்வொன்று குறித்து சர்வகட்சிக்குழு புதிதாக சிந்திப்பதை நாங்கள் வரவேற்போம்.

பிரிட்டனிலுள்ள இலங்கைத் தமிழர்களுடன் அண்மையில் சந்திப்பொன்றை மேற்கொண்டோம். பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர். இதன்போது இலங்கையில் இடம்பெறும் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு உதவக்கூடிய விதத்தில் செயற்படுவது முழுமையாகப் பொருத்தமற்றது என்பதை தமிழ் மக்களுக்கு எடுத்துக்கூறினோம். இலங்கையின் மனித உரிமை நிலவரம் குறித்த கரிசனை மற்றும் வருமான மட்டம் போன்ற காரணங்களை அடிப்படையாக வைத்தே பிரிட்டனின் வெளிநாட்டு அபிவிருத்தி நிதியுதவி இலங்கைக்குக் குறைக்கப்பட்டது. இலங்கையின் நிலவரம் காரணமாக அந்த நாட்டிற்கான மனிதாபிமான உதவிகளில் எவ்வித மாற்றமும் செய்யப்போவதில்லை. சர்வதேச மோதல் தவிர்ப்பு குழு மூலமாக நாங்கள் உதவிகளை வழங்குகின்றோம். பிரிட்டன் மனிதாபிமான செயல்திட்டத்தில் பங்குகொள்ள விரும்புகின்றது. எனினும் இரு நாடுகளுக்கும் இடையில் இரு தரப்பு உதவி அபிவிருத்தித் திட்டம் எதுவுமில்லை. எமது அடிப்படைக் கவலையென்னவென்றால் இலங்கை எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வை வழங்கக்கூடிய அரசியல் முயற்சி எதுவும் அனைத்துக் கட்சிக்குழுவினாலும் வேறு வழிமுறைகளாலும் முன்வைக்கப்படவில்லையென்பதே.

இலங்கையின் ஆடை வர்த்தகம் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் தொடர்பான விவகாரத்தில் அரசியலும் வர்த்தகமும் இணைந்துள்ளன. வர்த்தகத்தை அடிப்படையாக வைத்துப் பார்க்கும்போது ஐரோப்பிய ஒன்றியத்தின் சர்வதேச வர்த்தக ஏற்பாடுகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் காரணமாக இலங்கை போன்ற நாடுகள் பாதிக்கப்படக்கூடாது என்பது குறித்து நாங்கள் கவலை கொண்டுள்ளோம். இதேவேளை, பரந்துபட்டளவில் இலங்கையின் மனித உரிமை நெருக்கடிகள் மற்றும் அரசியல் ரீதியான போதிய முன்னேற்றமின்மை குறித்து நாங்கள் கவலையடைந்துள்ளோம். ஐரோப்பிய ஒன்றியமும் எங்களைப் போல இலங்கையை உன்னிப்பாக அவதானித்து வருகின்றது. தற்போதைக்கு இலங்கையில் மனித உரிமைக் கண்காணிப்பில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவது குறித்தே பிரிட்டன் கவனம் செலுத்தி வருகின்றது. தடைகள் குறித்தல்ல. ஐரோப்பிய ஒன்றியமும் இதே நிலைப்பாட்டையே கொண்டுள்ளது. விடுதலைப் புலிகளுடன் நிபந்தனையற்ற பேச்சுக்குத் தயார் என்ற அரசின் அறிவிப்பு வெளிப்படையானதாக இருக்கவேண்டும்.

இலங்கை அரசு முழு மனதுடன் அரசியல் முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும். அந்த நாடு எதிர்கொண்டுள்ள பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு சாத்தியமெனக் கருதும் அபாயகரமான போக்கைத் தவிர்க்க வேண்டுமென பிரிட்டன் அழுத்தம் கொடுக்கும். மோதலிற்கு அரசியல் தீர்வைக் காண்பது குறித்த எமது அயர்லாந்து அனுபவங்களிலிருந்து இலங்கை அரசு பாடம் கற்க வேண்டுமென நாங்கள் வலியுறுத்தி வருகிறோம். இலங்கை அதன் உண்மையான ஜனநாயகத் தன்மையால் பாதுகாக்கப்படுகின்றது. தேர்தல் மூலம் தெரிவுசெய்யப்பட்ட அரசு உள்ளது. இதன் காரணமாக அதன் அயல் நாடுகளும் ஐரோப்பிய ஒன்றியமும் இலங்கையின் கொள்கைகள் குறித்து குறிப்பிடத்தக்க அக்கறை கொண்டுள்ளன. அந்த நாட்டின் விடயங்களில் செல்வாக்குச் செலுத்தும் உத்தியோகபற்றற்ற குழுவை அமைப்பதையும் நேரடி அழுத்தங்களைக் கொடுப்பதையும் அவை தவிர்த்துவந்தன. நோர்வேயின் மத்தியஸ்த செயற்பாடுகளில் அவை தங்கியிருந்தன. எனினும் அது துரதிஸ்டவசமாக முடிவடைந்து விட்டது. என்றார் அவர்.


**துரித பணமாற்றுச் சேவை**
- 50 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
- கனடாவில் தொடர்ந்து 17 வருடங்கள் ஒரே இடத்தில் சேவை
- தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை

வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
416.267.8221



Thinking of buying a new home ? & Commercial Properties ?
"CALL US FIRST" TO GET PRE-APROVAL
Direct: 416-666-5540
நம்பிக்கை, நாணயம், நேர்மை, அனுபவம் நெறிபடுத்தப்படும்
Chandran Ponnampalam
Senior Mortgage Consulton
200 CONSUMERS RD. #301, TORONTO ON
TEL: 416-279-1159



All Epson ink catridges $7.99
All Brother ink Catridges $8.99
All Canon (non-chipped) ink $7.99
HP Laserjet Q2612A (12A) $49.99
Mention This code and save an additional $5.00 : 761605
A1 Ink Rainbow Inc.
T: 416.286.0333
F: 416.286.0334
- Compatible Toner & Ink
- Unbeatable prices
- 100% Satisfaction Guaranteed
- Expert Advice & Services
- Free Delivery



அடமானக் கடன் செய்து கொடுப்பதே! என் பணி
Das Narayanasamy AMP
Mortgage Specialist
Cell: 416-543-6614
Business: 416-759-1818, Fax: 416-299-0789
E-mail: das.narayanasamy@centumveedu.com
www.centumveedu.com
CENTUM™ Veedu Mortgages Inc.



Buy & Sell Residential and Commercial
Raj A. Rasaratnam B.Com.
Sales Representative
416-726-8055
வீடு வியாபார நிலையங்கள் வாங்க விற்க
HomeLife/ GTA Realty Inc. Real Estate Brokerage*
*Independently own and operated
1711 McCowan Rd., Suite #206, Scarborough, ON M1B 3Y3



கதிர்
GTA Square SOLD OUT ! Only 12 units left
Middlefield & finch
GTA SQUARE
Great Opportunity
Don't Miss Out
24 hr. 416 856 6900
Office 416 321 6969
Call me for a change
Kathir S Kathirgamanathan P. Eng.
kathirs@rogers.com Sales Representative
HomeLife / GTA Realty Inc., Brokerage*
1711 McCowan Rd, #206, Toronto
Independently owned and operated



வீடு வாங்க, விற்க...
ரவி பரமு
வீட்டுப் பிரதிநிதி
DIRECT: 416.262.4176
OFFICE: 416.321.6969
HomeLife GTA Realty Inc., Brokerage*
1711 McCowan Rd.
Suite #206, Toronto
• INDEPENDENTLY OWNED AND OPERATED

# உங்கள் நிதியமும் பணச்சந்தையும்

பலபேர் ஆர்.ஆர்.எஸ்.பி க்குப் பணம் செலுத்தி ரெவின்யு கனடாவிலிருந்து காசோலை எவ்வளவு வரும் என்று கணக்குப் பார்த்திருக்கும் நேரம் இது. கடைசி நிமிடத்தில் ஆர்.ஆர்.எஸ்.பியில் பணம் செலுத்தியவர்கள் பலபேர் தங்கள் நிதி ஆலோசகருடன் கலந்து ஆலோசித்திருக்க மாட்டார்கள். நேரம் இருந்திருக்காது. ஏதோ ஒன்றில் சடுதியில் பணத்தைப் போட்டு வரி பற்றுச்சீட்டைப் பெற்றிருக்கக் கூடும். அத்தகையோர் தங்களின் புதிய, பழைய சேமிப்புக்களையும், முதலீடுகளையும் பற்றி நிதி ஆலோசகருடன் கலந்து ஆலோசிக்க வேண்டிய நேரம் மார்ச்சில் வந்து விட்டது. அப்படிச் செய்யவில்லை என்றால் நட்டம் உங்களுக்குத்தான்.

எதிலும் ஒரு தெளிவு வேண்டும். ஆர்.ஆர்.எஸ்.பி ஆகட்டும் அல்லது மற்ற சேமிப்புக்கள் ஆகட்டும். எதற்காகச் சேமிக்கின்றோம் என்பதில் ஒரு தெளிவு வேண்டும். அவசரகாலத் தேவைகளுக்காகச் சேமிக்கலாம், ஓய்வு காலத்திற்கு என சேமிக்கலாம், பிள்ளைகளின் படிப்புக்கு என்று சேமிக்கலாம், வீடு வாங்க என்று சேமிக்கலாம், இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம். நீங்கள் எதற்காகச் சேமிக்கிறீர்கள்? எவ்வளவு காலத்திற்கு சேமிக்க நினைத்துள்ளீர்கள்? எவ்வளவு தொகையை, எத்தகைய இடைவெளிகளில் உதாரணத்துக்கு மாதந்தோறும் சேமித்து வருகிறீர்கள் அல்லது வரப் போகின்றீர்கள். தெளிவாக இருக்கின்றீர்களா? நீண்ட காலத்திற்கு எனும் போது உங்கள் சேமிப்புக்கள் எந்த வீதத்தில் வளர வேண்டும் என்று நினைக்கின்றீர்கள். அதற்கேற்பத் தான் தற்சமயம் வளர்ந்து கொண்டிருக்கின்றதா? வங்கி வைப்புக்களில் வட்டிவீதம் குறைவு. அவற்றில் தான் உங்கள் சேமிப்பு உள்ளதா? ஆண்டுக்கு ஒரு முறையாவது நீங்கள் இவற்றை ஆய்வு செய்து பார்க்க வேண்டும். உங்களுக்கு என்று ஒரு நிதி ஆலோசகர் இருந்தால் அவருடன் சேர்ந்து இந்த ஆய்வைச் செய்யலாம்.

சரி, இப்போது ரெவின்யு கனடாவிலிருந்து கிடைக்கப்போகும் காசோலை பற்றிய சில விவரங்களைப் பார்ப்போம். சென்ற ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு பொதுவில் எல்லோருக்குமே காசோலை அதிகம் வரும்.

குறைந்த பட்ச வரி வீதம் 15.5 சதவீத்திலிருந்து 15 சதவீதமாகக்குறைக்கப்பட்டுள்ளது. Basic Personal Amount என்று சொல்லப்படும் தனிநபர் வரிக்கு ஆளாகாத தொகை 9,600 டொலர்களாக உயர்த்தப்பட்டுள்ளது. அதாவது ஒருவரின் வரிக்கு ஆளாகும் வருமானம் 9,600 டொலர்களுக்கும் குறைவு என்றால் அவர் வருமானவரி ஒன்றும் கட்டத் தேவையில்லை. வாழ்க்கைத் துணைவர் அல்லது துணைவி வேலைக்குச் செல்லாதவராய் இருக்கும் பட்சத்தில் கூடுதலாக 9,600 டொலர்கள் வரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்படுகின்றது. இந்த 9,600 கூடுதல் டொலர் வரி விலக்கு வாழ்க்கைத்துணை இல்லாத பட்சத்தில் மற்றொரு தகுதி வாய்ந்த தன்னைச் சார்ந்துள்ள நபருக்காகவும் தரப்படுகின்றது.

விலைவாசி ஏற்றம் சராசரியாக 2.2 சதவீதம் என்று கணக்கிடப்பட்டு, அதற்கேற்ப ஏற்கனவே நடைமுறையில் உள்ள வரி வீதங்களும் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. 2007 க்கான வரி வீதங்களைக் கீழே தருகின்றோம்.

வரிக்கு ஆளாகும் வருமானம்
37178 வரை வரிவீதம் 15 சதவீதம்.
37178 இலிருந்து 74357 வரை வரிவிகிதம் 22 சதவீதம்
74357 இலிருந்து 120887வரை வரிவிகிதம் 26 சதவீதம்
120887 க்கு மேல் வரிவிகிதம் 29 சதவீதம்

உங்கள் வீட்டில் குழந்தைகள் இருந்தால் நீங்கள் கட்ட வேண்டிய வருமானவரி குறைந்து, Refund Cheque கூடுதலாக கிடைக்கும். குழந்தைகளுக்காக சில புதிய வரிச் சலுகைகள் இந்த ஆண்டிலிருந்து (வருமானவரி 2007) நடைமுறைக்கு வருகின்றது.

1990 ஆம் ஆண்டோ அதற்குப் பிறகோ பிறந்த ஒவ்வொரு குழந்தைக்கும் 2007 வருமானவரி ஆண்டிலிருந்து 2,000 டொலர் Non refundable credit ஆகத் தரப்படுகின்றது. 16 வயதுக்குட்பட்ட குழந்தைகள் இருந்து, சில அங்கீகரிக்கப்பட்ட ஆரோக்கிய நடவடிக்கைகளில் பணத்தைச் செலவழித்திருந்தால் மேலும் ஒரு ஐந்நூறு டொலர் வரியில் குறையும்.

ஓய்வூதியம் பெறும் முதியவர்களுக்கும் சில இனிப்பான செய்திகள் இருக்கின்றன. Pension Income Splitting என்று சொல்லப்படும் முறையில் கணவன் மனைவி இருவரும் சேர்ந்து மொத்தத்தில் வருமான வரி செலுத்தவதைக் குறைத்துக் கொள்ள முடியும்.



## பெரி. முத்துராமன்

நாம் இக்கட்டுரையில் கோடிட்டு காட்டியிருப்பது மிகக் குறைவே. முழுவிவரங்களையும் தெரிந்து கொள்ள ரெவின்யு கனடா இணைய தளத்துக்குச் செல்லலாம். அல்லது உங்கள் வரி தயாரிப்பாளரை அணுகி தெரிந்து கொள்ளலாம்.



இக்கட்டுரை ஆசிரியரிடம் ஆலோசனைபெற ஸ்கோஷிய வங்கி தொலைபேசி எண் 416.439.3040 Ext. 2010

# பிடல் காஸ்ரோ ஒரு சகாப்தம்

கடந்த ஐந்து தசாப்தங்களாக அமெரிக்காவிற்கு மிக அண்மையில் இருக்கும் கியூபா என்ற குட்டித் தீவினை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்து ஆண்டுவந்த பிடல் காஸ்ரோ தனது பதவியில் இருந்து ஓய்வு பெற்றுக்கொண்டார்.

எண்பதிற்கு ஒரு வயது நிரம்பிய பிடல் காஸ்ரோ மீண்டும் தான் கியூபாவின் ஜனாதிபதி ஆகமாட்டேன் என்று திட்டவட்டமாக கூறியுள்ளார். இதனை உத்தியோக பூர்வமாக கியூபாவின் கம்யூனிஸ் கட்சியின் பத்திரிகையான Granma அறிவித்திருந்தது. இதனை அடுத்து கியூபாவின் புதிய ஜனாதிபதியாக பிடல் காஸ்ரோவின் சகோதரர் ராவுல் காஸ்ரோ (76) தெரிவு செய்யப்பட்டுள்ளார்.பிடல் காஸ்ரோவுக்கு நான்கு பெண்களின் மூலம் எட்டுக் குழந்தைகள் இருக்கலாம் என்று நம்பப்படுகின்றது. 1948 இல் Mirta Diaz Balart வை திருமணம் செய்திருந்தார். ஆனால் ஆறு வருடங்களின் பின்னர் இவர்களுக்கு விவாகரத்தானது. இவர்களுக்கு 1949 இல் ஒரு மகன் பிறந்திருந்தார். காஸ்ரோவுக்கும் இன்னொரு பெண்ணுக்கும் 1955 இல் இன்னொரு மகன் (Jorge), மற்றும் ஒரு பெண் மூலம் 1956 இல் மகள் (Alina) உள்ளது. பின்னர் காஸ்ரோ சீனித் தொழிலாளர் சங்கத்தின் செயலாளர் Dalia Soto Del Valle ஐ 1961 இல் சந்தித்தார். இவர்களுக்கு ஐந்து மகன்கள் (Alexis, Alexander, Alejandro, Antonio and Angel) உள்ளனர்.

## – செழியன் –

1926 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13 ஆம் திகதி கியூபாவின் கிழக்கு மாகாணமான Oriente இல் உள்ள நகரான Biran இல் பிறந்தார். ஆனால் இவர் 1927 இல் பிறந்திருக்கலாம் என்றும் ஒரு தகவல் உள்ளது. இவருடைய தந்தையார் Angel ஒரு வசதியான நிலசுவாந்தர். தந்தை Anlel உண்மையான சொந்த இடம் ஸ்பெயின் ஆகும். ஸ்பெயின் இல் இருந்து கியூபாவிற்கு சென்று வாழ்ந்தவர். பிடலின் தாயார் Lina தான் Anlel இன் முதல் மனைவி. இவர்களுக்கு பிடல் காஸ்ரோ உட்பட ஐந்து குழந்தைகள்.



பிடல் காஸ்ரோ தனது 25வயதில் University of Havana இல் தனது சட்ட படிப்பை (1952) முடித்ததும் ஏழைகளுக்கு இலவச சட்ட ஆலோசனைகளை வழங்க ஆரம்பித்தார். அத்தோடு கியூபா நாடாளுமன்றத்திற்கான தேர்தலில் வேட்பாளராக போட்டியிட்டார். தேர்தலுக்கு முன்னர் நாடாளுமன்ற ஆட்சி முறை தனது இராணுவபலத்தால் தகர்த்த சர்வாதிகாரி Fulgencio Batista ஆட்சியைக் கைப்பற்றினார்.

கியூபாவின் இந்த சர்வாதிகாரி Fulgencio Batista வின் ஆட்சியை அழிக்க 1953இல் பிடல் காஸ்ரோ 150 பேருடன் ஒரு ஆயுதப் புரட்சியில் ஈடுபட்டார். அது தோல்வியில் முடிவடைந்தது. பிடல் காஸ்ரோ கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். இந்த காரணமாக பிடல் காஸ்ரோவின் பெயர் கியூபா முழுவதும் பரவியது. 1955இல் மன்னிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட காஸ்ரோ மெக்சிக்கோவுக்கு சென்றார்.அத்தோடு அமெரிக்காவில் இருந்த தனது சகோரர் ராகுலையும், ஆஜென்டீனா புரட்சியாளர் சேகுவாராவையும் (சே) சந்தித்தார். கியூபாவின் சர்வாதிகார ஆட்சியை கவிழ்ப்பதற்கு இரண்டாம் முறையாக பிடல் காஸ்ரோ திட்டமிட்டார்.

பிடல் காஸ்ரோ 1956ஆம் ஆண்டு டிசம்பர் இரண்டாம் திகதி மீண்டும் கியூபாவுக்கு சேகுவாராவுடன் படகில் சென்றார். இவர்களுடன் சர்வாதிகாரி Fulgencio Batista யின் ஆட்சியை கவிழ்ப்பதற்காக 81 போராளிகள் சென்றனர். இவர்களில் அனேகம் பேர் Fulgencio Batista படையினரால் கொல்லப்பட்டனர். பிடல் காஸ்ரோவும், சேகுவாராவும் தப்பியவர்களுக்குள் இருந்தனர்.

இதன் பிறகு இவர்கள் தென் கிழக்கு பகுதியில் இருக்கும் Sierra Maestra மலைகளுக்கு தப்பிச் சென்று அங்கிருந்து சர்வாதிகாரி Fulgencio Batistaயின் ஆட்சியை கவிழ்ப்பதற்கு திட்டமிட்டனர். 1959 ஜனவரியில் காஸ்ரோ, சேகுவாரா தலைமையில் சர்வாதிகாரி Fulgencio Batista வின் ஆட்சிக்கு எதிரான ஆயுதப்போராட்டம் நடைபெற்றது. இந்த யுத்தத்தில் காஸ்ரோ வெற்றி பெற்றார். கியூபாவின் பிரதம மந்திரி ஆகினார்.

வெகு விரைவாக அமெரிக்கா செயல்பட்டது. உடனடியாக கியூபாவின் புதிய ஆட்சியை அங்கீகரித்தது. ஆனால் தனது நாடு அமெரிக்காவினால் சுரண்டப்படுவதற்கு எதிராக உறுதியாக நின்றார். தனது நாட்டின் விவசாய உற்பத்தியை நிறுத்தி, விவசாயிகளை ஒட்டாண்டிகளாக்கிவிட்டும், கியூபா மக்களை பட்டினி போட்டுவிட்டும், அந்த நிலங்களில் அமெரிக்க கம்பெனிகள் இருந்ததை பிடல் காஸ்ரோ ஒரு போதும் அனுமதியளிக்கவில்லை. இதனால் கியூபா - அமெரிக்க உறவு முறிவடைந்தது. இதனை அடுத்து சோவியத்யூனியனுடனான வெகு இறுக்கமான தொடர்ச்சி 18 ஆம் பக்கம்

விளம்பரம்
VLAMBARAM

விளம்பரம் பத்திரிகை விளம்பரம் பப்க்கேஷன்ஸ் ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.

**பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

**Vlambaram, P.O. Box 37527, 31 Tapscott Road, Toronto, ON M1B 5P9, Canada**
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com

*ELECTRICAL WORKS*



FRIDGE, WASHER, DRYER போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும்.
நியாயமான கட்டணம். தரமான சேவை.
வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.
தொடர்புகளுக்கு: ஈசன் - ***416-286-2880***

# மத்திய அரசின் வரவு செலவுத்திட்டம்

2008 ஆம் ஆண்டிற்கான கனடிய அரசின் வரவு செலவுத்திட்டத்தை பழமை வாதக்கட்சி அரசின் நிதி அமைச்சர் ஜிம் பிலகேற்றி (Jim Flaherty) மாசி மாதம் 26 ஆந் திகதி மாலை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார். அதில் அடங்கிய முக்கிய விடயங்களை பார்ப்போம்.

1. வருமான வரிவிலக்கு பெறும் சேமிப்பு கணக்கு முறை (TFSA) ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது. 18 வயதும் அதற்கு மேற்பட்டவர்களும் தங்களுக்கு என ஒரு வருமான வரி விலக்குடைய சேமிப்பு கணக்கை 2009ஆம் ஆண்டில் இருந்து தொடங்கலாம். இதில் வருடம் ஒன்றிற்கு ஆகக்கூடிய தொகையாக $5,000 டொலரை சேமிப்பில் இடலாம். இதில் இடப்படும் பணத்திற்கு வரிவிலக்கு இல்லை. ஆனால் இதில் இடப்படும் பணத்தின் மூலம் பெறப்படும் வருமானத்திற்கோ அல்லது வட்டிக்கோ வரி அறவிடப்படமாட்டாது. ஒருவர் ஒருவருடம் $5,000 இற்கு குறைவாக இவ் TFSA சேமிப்பு கணக்கில் இட்டால் மிகுதித் தொகையை அடுத்த வருடம் இக்கணக்கில் இடலாம். இக்கணக்கில் இருந்து பணத்தை அதற்கு கிடைத்த வட்டியுடன் எப்பொழுதும் மீளப்பெறலாம். மீளப்பெறும் போது வரி செலுத்த தேவையில்லை.

2. வருடம் ஒன்றிற்கு $350 மில்லியன் டொலர் மாணவர்களுக்கு வழங்கும் கல்விக்கான உதவிப்பணமாக செலவிடப்பட உள்ளது. (Canada Student Grant Program) இது 2009 ஆண்டின் இலையுதிர் காலத்தில் ஆரம்பிக்கப்படும்.

3. அடுத்த நான்கு வருடங்களுக்கு மாணவர்களுக்கு வழங்கப்படும் கல்விக்கான கடன் உதவிப்பணமும் $123 மில்லியன் டொலர்களாக்கப்பட்டுள்ளது. (Canada Student Loan Program)

4. கனேடிய டொலரின் பெறுமதி உயர்வால் தத்தளிக்கும் இயந்திர பொருட்கள் உற்பத்தியாளர்கள் மற்றும் ஏற்றுமதிப் பொருட்கள் உற்பத்தியாளர்களுக்கும் உபகரணங்கள் வாங்குவதில் வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. அடுத்த மூன்று வருடங்களுக்கு அவர்களுக்கு இயந்திரங்களில் முதலீடு செய்வதற்காக ஒரு பில்லியன் டொலர் வரை உதவியளிக்கப்பட உள்ளது.

5. வாகனத்தயாரிப்பு பற்றிய ஆராய்ச்சிகளுக்கு (Research and Development) முதலீடாக அடுத்த ஐந்து வருடங்களுக்கு $250 மில்லியன் டொலர்களை அரசு செலவிட உள்ளது.

6. புதிய இலத்திரனியல் தகடு (Chip) பதிக்கப்பட்ட 10 வருடங்கள் பாவிக்க கூடிய Electronic Passports ஐ 2011 ஆம் ஆண்டில் இருந்து அரசு வழங்கவுள்ளது.

7. மாசு வாயுக்களில் இருந்து வெளியேறும் காபனை கட்டுப்படுத்தும் ஆராய்ச்சிகளுக்கு $250 மில்லியன் டொலர்களை அரசு செலவிட உள்ளது.

8. கனேடிய மாகாணங்களுக்கும் பிரதேசங்களுக்கும் மேலதிகமாக 2500 நகர்காவலர்களை (Police) தொழிலில் சேர்ப்பதற்காக $400 மில்லியன் டொலர் வழங்கப்பட உள்ளது.

9. கனடாவின் சுதேச மக்களான ஆதிவாசிகள் (Aboriginals) நலன்களைக் கவனிக்க அடுத்த இரண்டு வருடங்களுக்கும் $270 மில்லியன் டொலரை அரசு செலவிட உள்ளது.

10. பெற்றோலின் வரியால் அரசு பெறும் பணத்தில் ஒரு பகுதி மாநகரசபைகளுக்கு வழங்கப்பட உள்ளது.

11. பொது போக்குவரத்து சேவையை முன்னேற்ற $500 மில்லியன் டொலர் உதவி வழங்கப்பட உள்ளது.

12. மத்திய அரசின் சிறைச்சாலை அமைப்பில் மாற்றங்களை செய்வதற்காக $122 மில்லியன் டொலர் அரசு செலவிட உள்ளது.

13. இராணுவ செலவுகளுக்கு செலவிடும் தொகை 2011 ஆம் ஆண்டில் இருந்து வருடம் ஒன்றிற்கு 2 வீதத்தால் அதிகரிக்கப்பட உள்ளது.

14. ஆப்கானிஸ்தான் நாட்டை மீளக் கட்டி எழுப்புவதற்காக $100 மில்லியன் டொலரை அரசு வழங்க உள்ளது.

15. வெளிநாடுகளுக்கு வழங்கும் உதவி இரண்டு மடங்காக அதிகரிக்கப்படவுள்ளது. இது 2010 ஆண்டளவில் $5 பில்லியன் டொல-ராக இருக்கும்.

மேற்கூறப்பட்ட அரசின் செலவினங்களால் கனேடிய அரசின் வருடாந்த செலவினம் அடுத்த ஆண்டு $6.9 பில்லியன் டொலரால் அதிகரிக்கப்பட உள்ளது. அதாவது கனேடிய அரசின் 2008 / 2009 ஆண்டின் செலவு $208.1 பில்லியன் டொலராகும். இதில் கனேடிய அரசு தனது கடனுக்கு திருப்பிக் கட்டும் பணம் அடங்கவில்லை.

இதே 2008 / 2009 ஆண்டின் கனேடிய அரசின் வரவு $241.9 பில்லியன் டொலராக எதிர்பார்க்கப்படுகிறது. மேலதிக வருமானத்தில் $2.3 பில்லியன் டொலரை கடனை அடைப்பதற்காக அரசு செலவிடும். இந்த ஆண்டும் (2007 / 2008) $2.3 பில்லியன் டொலரை கனேடிய அரசு கடனை அடைப்பதற்காக செலுத்தியது. கனேடிய அரசின் கடன் 2008 / 2009 ஆண்டில் $454.8 பில்லியன் டொலராக இருக்கும்.

கனேடிய பொருளாதாரத்தின் வளர்ச்சி 2008 ஆம் ஆண்டில் 1.7 வீதமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

- நன்றி CTV

# உன் வாழ்விற்குப் பொறுப்பு உன் ஆன்மா

என் வாழ்வின் பொறுப்பு என்கையில் இல்லை, ஆன்மாவின் வசம் தான் உள்ளது எனும் உண்மையை மறந்ததற்காக, என்னை நானே இன்று மன்னித்துக் கொள்கிறேன்.

எம் வாழ்வில் எமது விருப்பப்படி விடயங்கள் நடைபெறாத போது பெரும்பாலும் நாம், இது பிழை அது சரி, இது நல்லது அது கூடாது, என முத்திரை குத்த ஆரம்பித்து விடுகின்றோம். எமக்குச் சாதகமாக சமா-சாரங்கள் செல்லாவிட்டால் பயத்தால் உறைந்து, இது இனிச் சரிவராது எனக் கைகழுவி விடுகின்றோம். ஆனால், இப்படிப்பட்ட பாதகமான பதில் நடவடிக்கைகளைத் தவிர்த்திட ஒரு வழி இருக்கின்றது. அது என்ன தெரியுமா? அன்பு நிறைந்த ஆன்மாவின் பிரபஞ்சம், எந்த ஒரு உண்மையையும் ஒருபோதும் மறைக்காது என்பதை நாம் ஒருபோதும் மறக்காமலிருப்பது தான் அது. காலத்தின் ஓட்டமும், மன்னித்தலும் உண்மைகளை எப்போதும் வெளிப்படுத்திடும் ஆன்மாவின் பிரபஞ்சத்தில் தான் நாம் வாழ்கின்றோம். உன்வாழ்வில், சகலதையும் சரிவரத் தேர்ந்தேடுத்துச் செயற்பட்ட போதும், அதிகப்படியாகத் தவறான பலாபலன்களல்லவா உனக்குக் கிட்டுகின்றன என்பதை நீ ஒருவருக்கும் நிரூபிக்கத் தேவையில்லை. உன் தீவிர செயற்பாட்டின் விளைவுகள் நாசமாகும் போதும் நீ வாயை மூடிக்கொண்டு!



பின்வாங்கு! உனக்காகப் பிரார்த்தனை செய்! உன்வாழ்வில் யாவற்றிற்கும் ஆன்மா பொறுப்பாயிருக்கும் என்பதை மறந்ததற்காக, உன்னை நீயே மன்னித்துவிடு! சரியான காலநேரம் கிட்டும் போது நியதியின்படி உனது ஆன்மீக வாழ்வு மலர்வதை ஏதோ அல்லது யாரோ தடுத்து நிறுத்துவிடலாம் என நம்பியதற்காக உன்னை மன்னித்து விடு.

நீ அனுமதியளித்தால், நன்மையின் ஆன்மா, எப்போதும் உனக்காகப் பாடுபடக் காத்திருக்கின்றது. யாராவது தவறாக உன் ஆன்மாவைத் தடுத்து உன்னை மிதித்தாலும், அத்தெய்வீகத் திட்டம் வெகுநாளைக்கு மறைந்திருக்காது என்பதைத் துல்லியமாகப் புரிந்து கொள். வாழ்வும் பிரச்சினைகளைச் சரிவரச் சமாளித்திட, உன் ஆன்மா உனக்கு நிச்சயம் வழிகாட்டும். ஆனாலும் பிரச்சினை தீர்ந்து சகலதும் சரிவந்தவுடன் பெருமிதத்தில் மிதக்காதே! ஆன்மாவின் செயற்பாட்டை எதிர்த்துச் சவால் விடுகிறவர்களுக்குத் தங்கள் குற்றம் தெரிவதில்லை என்பதால் அவர்களை மன்னித்து விடு. பிரபஞ்சத்தின் சக்திபீட மையத்திலிருக்கும் ஆன்மா, எப்பொழுதும் நன்மையின் பக்க பலமாகவேயிருக்கும் அந்தந்த நேரங்களில் வெளிப்படுத்த வேண்டியவற்றை வெளிப்படுத்தி கற்பிக்க வேண்டியவற்றைக் கற்பித்து, செய்ய வேண்டியவற்றைத் தவறாவது ஆன்மா எப்போதும் செய்யும்.

உனக்குப் பாதகமான நிலைகளில் அகப்பட்டுத் தத்தளித்தவாறு இன்றுவரை நீ கவலைப்பட்டுக் கொண்டு இருந்திருக்கலாம். ஆன்மாவின் நன்மை பிரபஞ்சத்தினை அரசாளும் போது உனக்குத் தீங்குதான் எப்போதும் விளையும் எனப் பிழையாக இன்றுவரை நம்பியதற்காக உன்னை மன்னித்துவிட இனிப்பழகிக் கொள். எந்தவோர் வாழ்விற்கும், எந்தச் சந்தர்ப்பத்திலும், அன்புமிகு ஆன்மாதான் பொறுப்பு என்பதை நன்குணர்ந்து அதை நன்றியுடன் இன்று நினைவுகூர்கின்றேன்.

ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள் 120

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் 905-270-1214

லலிதா புரூடி




APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6



# மஹாசிவராத்திரி விழா - இரவு முழுதும் நிகழும் இறைவிழா

> மனிதத்தன்மையின் வளர்ச்சி, சக்தி மேல் நோக்கி நகர்தலை அடிப்படையாகக் கொண்டது. ஆத்ம சாதனைகள் எல்லாமே அதற்காகத்தான். அந்த நோக்கத்தில் மஹாசிவராத்திரி நாளை முழுமையாய் பயன்படுத்திக் கொள்ளுங்கள். - சத்குரு

"வரலாற்று நிகழ்வுகளையும், வெற்றிகளையும், வாழ்வோடு பின்னிப் பிணைந்த அம்சங்களையும் கொண்டாட பல விழாக்கள் உள்ளன. விதை விதைக்க, நாற்று நட, நீர் விட, அறுவடை செய்ய என பல விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. ஆனால் மஹாசிவராத்திரி விழா மிகவும் வித்தியாசமானது, முக்கியமானது. ஆன்மீகப் பாதையில் பயணிப்பவர்களுக்கு மட்டுமல்ல குடும்பச் சூழ்நிலையில் வாழ்பவர்களுக்கும் கூட மஹாசிவராத்திரி முக்கியத்துவம் வாய்ந்தது தான்.


சத்குருவால் பயிற்சியளிக்கப்பட்ட ஆசிரியையால் எதிர்வரும் June மாதம் யோகா வகுப்புக்கள் நடைபெறவுள்ளது. ரொறொன்ரோவில்

தொடர்புகளுக்கு: 416.300.3010

website: www.ishafoundation.org or www.ishayoga.org


உங்களில் நிறையப்பேர் சிவனை எல்லாவற்றிற்கும் மேலான கடவுள் என்றே பார்க்கிறீர்கள். ஆனால் சிவபுராணத்தில், மற்ற மனிதர்களைப் போலவே வாழ்க்கையில் எல்லாவற்றையும் கடந்து வந்தவராக அவர் வர்ணிக்கப்படுகிறார். மிகமிக வசீகரமானவராகவும், அருவருப்பைத் தருபவராகவும், பெரும் யோகியாகவும், சாதாரண குடும்பஸ்தராகவும், ஒழுக்க சீலனாகவும், குடிபோதையில் தள்ளாடுபவனுமாகவும், நல்ல நடன வித்தகனாகவும், அசைவற்று நிச்சலனமாய் நெடுங்காலம் இருப்பவனுமாக அவன் இருக்கிறான். கடவுளர்களும் அவனை வழிபடுகின்றனர், பிசாசுகளும், துர்தேவதைகளும் சிவனை வணங்குகின்றனர்.

ஏன் இப்படி உருவகப்படுத்தப்பட்டது என்றால், இப்படிப்பட்ட ஒரு மனிதரை உங்களால் ஏற்றுக்கொள்ள முடிந்தால் நீங்கள் வாழ்க்கையை வெகு சுலபமாய்க் கடந்துவிடுவீர்கள் : மிக மிக அழகானவன், அதே நேரத்தில் மிகவும் கொடூரம். பிரபஞ்சத்தில் நீங்கள் கண்டுணரக் கூடிய எல்லாத் தன்மைகளும் கலவையாய் சிவனிடத்தில் குடி கொண்டிருந்தது. ஒருவரது வாழ்க்கையில் நடக்கும் முழுப்போராட்டமும், அழகானதை நல்லதை மட்டுமே எடுத்துக் கொள்ள நேரும் அவஸ்தையில் தான் உள்ளது. சிவன் எல்லாத்தன்மைகளும் ஒன்றாய்க் கலந்த கலவை.

சிவராத்திரி நாள் சிவனின் திருமணம் நடந்த நாள். குடும்பச் சூழலில் உள்ளவர்கள் அந்த நாளை அப்படித்தான் கொண்டாடுகிறார்கள். ஆன்மீகப் பாதையில் பயணிப்பவர்கள் மஹாசிவராத்திரி நாளை சிவன் கைலாயமலையுடன் ஐக்கியமான நாளாகக் கொண்டாடுகின்றனர். ஏனென்றால் அவர் ஒரு மலையைப்போல அசைவற்று, முற்றிலும் நிச்சலனமான நாள் அது. பல்லாயிரம் வருட தியானத்திற்குப் பிறகு அவர் முழுமையாய் நிச்சலனநிலையான நாள்தான் மஹாசிவராத்திரி நாள். எனவே ஆன்மீகவாதிகள் அந்த நாளை நிச்சலனத்துக்கான நாளாகக் குறிப்பிடுகின்றனர்.

ஒவ்வொரு மாதத்தின் 14ம் நாளும் சிவராத்திரி நாள் தான். இதில் மாசி மாத சிவராத்திரி மஹாசிவராத்திரி எனப்படுகிறது. ஆன்மீகப் பாதையில் பயணிப்பவர்கள் அந்த நாளில் ஆத்ம சாதனயில் ஈடுபடுவர். ஏனென்றால் மனித உடலில் சக்தி இயல்பாகவே அந்நாளில் மேல்நோக்கி ஈர்க்கப்படுகிறது. புராணங்கள், "நிமிர்ந்த முதுகு கொண்டோர் பேறு பெற்றவர்கள்" என்று சொல்கின்றனர். நீங்கள் இன்னமும் படுக்கை வாட்டில் முதுகுத் தண்டை கொண்ட ஜீவராசியாக இருந்தால் இந்த நாளை பயன்படுத்திக் கொள்ள முடியாது. ஆனால் முதுகு நிமிர்ந்த உயிரினம் எனில் மஹாசிவராத்திரி நாளில் எந்தவித முயற்சியும் இன்றி சக்தியை மேல்நோக்கி நகர்த்தலாம்.

மஹாசிவராத்திரி நாள் ஆண்டுக்கொரு முறை வருகிறது. அந்த நாளில் இரவு முழுவதும் உறங்காமல் ஆத்ம சாதனைகளைச் செய்வதே சாதகர்களின் விருப்பமாய் இருக்கிறது. அந்த நாளில் செய்யப்படும் ஆத்ம சாதனைகளுக்கு இயற்கையின் உறுதுணை மிகவும் அதிகம். மனிதத்தன்மையின் வளர்ச்சி, சக்தி மேல் நோக்கி நகர்தலை அடிப்படையாகக் கொண்டது. ஆத்ம சாதனைகள் எல்லாமே அதற்காகத்தான். அந்த நோக்கத்தில் மஹாசிவராத்திரி நாளை முழுமையாய் பயன்படுத்திக் கொள்ளுங்கள்."



சத்குரு ஜக்கி வாசுதேவ்

### ஈஷாவில் மஹா சிவராத்திரி விழா

மிக நீண்ட வருடங்களாவே இந்தியாவின் பல்வேறு புனிதத்தலங்களிலும், ஆலயங்களிலும் மஹாசிவராத்திரி விழா கொண்டாடப்படுகிறது. புராணங்கள், இதிகாசங்கள், சான்றோர்கள் கூற்றுப்படி, இந்நாளின் இரவன்று உறங்காமல் விழித்திருப்பதற்கான பலன்கள் எடுத்துரைக்கப் பட்டு மக்களை விழித்திருக்கச் செய்வதற்கான பல உபாயங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. எந்தவொரு மதங்கள் மற்றும் நம்பிக்கைகளின் அடிப்படையையும் சாராமல், அறிவியல் ரீதியாகவே அனைவருக்கும் ஆன்மீக வளர்ச்சிக்குத் துணைபுரிவதால், மஹா சிவராத்திரி விழா ஆண்டுதோறும் ஈஷா யோக மையத்தில் இரவு முழுவதும் ஒரு இறைவிழாவாக நிகழ்கிறது. ஈஷாவில் மஹா சிவராத்திரி விழா இவ்வாண்டு மார்ச் 6 ஆம் நாள் வியாழனன்று மாலை 6 மணிக்குத் துவங்கி நடைபெறவுள்ளது. மிகப்பரந்த மைதானத்தில் நிகழவுள்ள இந்த இறைவிழா வினில் பங்கேற்றிட பரவலான ஏற்பாடுகள் நிகழ்ந்து வருகின்றன.

சத்குரு அவர்களின் அருளுரையத் தொடர்ந்து, நள்ளிரவு ஸந்தியா காலை வேளையில், இலட்சோப இலட்சம் மக்கள் பங்கேற்க மஹா மந்திர உச்சாடனை நிகழ உள்ளது. பல லட்சம் மக்களால் ஒன்றாக உச்சரிக்கப்படும் அம்மந்திரமும், மைய அன்பர்களால் இசைக்கப்பட உள்ள மத்தள, கொட்டு முரசோசை முழக்கங்களும் இறையதிர்வினை எங்கெங்கும் ஏற்படுத்தக் கூடியவை.

மஹாசிவராத்திரி விழாவினில் உலகின் தலைசிறந்த இசைமேதைகள் பங்கேற்று, தெய்வீக இன்னிசை நிகழ்ச்சிகளை வழங்குகிறார்கள். பண்டிட் ஷிவ்குமார் ஷர்மா, பண்டிட் ஜஸ்ராஜ், திருமதி. சுதா ரகுநாதன், பாம்பே ஜெயஸ்ரீ, குண்டேச்சா சகோதரர்கள், சிவமணி, ராக் இசைப் பாடகர் ரெமோ பெர்ணான்டஸ், சூ.ஃ.பி இசைப் பாடகர் ஜிலாகான், கடம் கார்த்திக் போன்ற பல்வேறு இசைக்கலைஞர்கள், மெய்சிலிர்க்கச் செய்யும் இசைப்பரிமாணங்களை ஈஷாவில் சிவராத்திரி நாளன்று வழங்கியுள்ளனர். இவ்வாண்டு சிறப்பு இசைநிகழ்ச்சிகளாக பத்மவிபூஷன் டாக்டர். பாலமுரளிகிருஷ்ணா, திரு. ஷங்கர் மஹாதேவன், திரு. சிவமணி, திரு. மாண்டலின் ஸ்ரீனிவாஸ் ஆகியோரது இன்னிசை நிகழ்ச்சிகள் நிகழவுள்ளன.

நேரில் செல்ல இயலாதவர்கள் தொலைக்காட்சி மூலமாக கண்டுகளித்திட ஆஸ்தா (Astha TV - Channel - 584) டி.வி சேனல் நிகழ்ச்சிகளை நேரடி ஒளிபரப்பு செய்கிறது. ஈஷா யோக மையத்தில் நடைபெற உள்ள எல்லா நிகழ்ச்சிகளும் இந்திய நேரப்படி மாலை ஆறு மணி முதல் காலை ஆறு மணி வரை ஒளிபரப்பப்படுகின்றன. தொலைக்காட்சி வாயிலாக சத்குருவின் சக்திவாய்ந்த தியானங்களும் மஹாமந்திர உச்சாடனகளும் நேரடி ஒளிபரப்பாய் நிகழ்த்தப்படுகின்றன.

# பிரபஞ்சத்தின் பருமன்

## பிரபஞ்சம் - 11

பிரபஞ்சத்தின் பருமனை அளவிடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். பிரபஞ்சமானது எல்லாவெளிகளையும், நேரத்தினையும் எல்லா சடங்களையும் சக்திகளையும் தன்னுள் கொண்டது. பிரபஞ்சமானது அறியப்பட முடியாத அளவு பிரமாண்டமானது தான். ஆனாலும் இயலுமான அளவுக்கு அளந்து தான் பார்ப்போம். அதுகூட கொஞ்சம் வில்லங்கமானதுதான். ஏனெனில் சாதாரண மனிதர்களாகிய எங்களின் எண்ணத்தில் அளவிடப்படும் படியான தூர அலகுகள் மிகவும் சிறியனவாகும். எமக்கு உடனேயே ஞாபகத்தில் வரும் தூர அலகுகள் மைல், அல்லது கிலோமீற்றர் என்பவை தான். இவற்றை நியமாக வைத்துக்கொண்டு இந்த அகன்று, பெருத்துக் காணப்படும் பிரபஞ்சத்தினை அளந்து விடலாம் என்பது..... நான் என்னென்று இதனை முடிப்பது. உதாரணமாக ஒரு விண்மீனின், பருமனைக் கூறும்போது சுமாராக ஒரு மில்லியன் மைல்கள் எனக் கூறினால் அது அவ்வளவு தெளிவானது என்று கூறமுடியாது. சராசரியாக 5 அல்லது 6 அடி உயரமான மனிதர்களாகிய நாம், இந்த முயற்சியில் பல உத்திகளைப் பாவிக்கத்தான் வேண்டியுள்ளது.

சரி, நமது ஊரினை எமது பருமனின் அளவாகக் கருவோம். என்ன, எமது ஊர் மூன்று மைல் நீளமும், மூன்று மைல் அகலமுமான ஒரு சற்சதுர ஊராகப் பார்ப்போமே! (எனது ஊர் இந்த அளவுத் திட்டத்தில் இல்லை என்கின்றீர்களாக!) இதற்குள் தான் எத்தனை வீடுகள், எத்தனை மனிதர்கள், இன்னமும் எத்தனை உயிர்கள் என....! சரி வசதியாக, மெற்றிக் அளவு திட்டத்தில் இதனைப் பார்த்தால் எமது ஊரின் பருமனில் இருந்து எங்கு போவோம்? மாகாணம்?....நாடு?.... இப்படியாகப் பெருப்பித்துக் கொண்டு போனால் இலகுவில் முடிவினைப் பெறமுடியாது. எனவே கொஞ்சம் பெரியதாகப் பார்ப்போம். பெரியதென்றால்....

ஆம்! எமது அடுத்த பருமன், எமது பூமி. எமது பூமியின் சராசரி விட்டம் 12,756 கிலோமீற்றர்கள். ஆக, எமது பிரபஞ்சப் பார்வையின் விரிவு கிட்டத்தட்ட 13,000 கிலோமீற்றர் வரை வளர்ந்து விட்டதல்லவா. இன்னமும் கொஞ்சம் இந்த விரிவை நீட்டிப் பார்ப்போமே! எதுவரை போகலாம்? சந்திரன் வரை செல்வோமா! எமது பூமியில் இருந்து எமது சந்திரன் சுமாராக 380,000 கிலோமீற்றர் தூரத்தில் பூமியை வலம் வருகின்றது. இப்போது உள்ள எமது பிரபஞ்ச விரிவுப் பார்வையில் எமது பூமி எப்படியாக இருக்கும் என எண்ணுகின்றீர்கள். ஒரு சிறிய பொட்டாக இருக்கும் அல்லவா! அப்படியாயின் 380,000 கிலோமீற்றர் பருமனுடன் 5அடி அல்லது 6அடி உயரமான எம்மை ஒப்பிட்டுப் பாருங்கள்?

அடுத்து இன்னமும் கொஞ்சம் பெரியதாகப் பார்ப்போம். எதுவரை விரிவுபடுத்தலாம்! சரி, எமது கதிரவன் வரை போவோமே! பூமியில் இருந்து சூரியனின் தூரம் சராசரியாக $1.49 \times 10^8$ கிலோமீற்றர்கள். பார்த்தீர்களா! எவ்வளவு பெரிய பருமனாகிவிட்டது எங்களது பிரபஞ்சப் பார்வை

அது சரி அது என்ன $10^8$ எனக் கேட்கின்றீர்களா! அதுவேறு ஒன்றுமில்லை. ஒன்று என்ற இலக்கத்தின் பின்னால் 8 பூச்சியங்கள் உள்ளன என்பதை விஞ்ஞானிகள் அடையாளப்படுத்துகின்றார்கள். மிகவும் பெரிய தூரங்களுடன், பெரிய பெரிய எண்களை இந்த விஞ்ஞான ஆய்வாளர்கள் பாவிப்பதால், சிக்கல்கள் இல்லாது இருப்பதற்காக இப்படியாக அடையாளப்படுத்துகின்றார். இங்கு $10^8$ என்பது 100000000 என்ற இலக்கத்திற்குச் சமனாமாகும். சரி இப்போது எமது பூமியின் பருமனை ஒப்பிட்டுப்பாருங்கள்.

$1.49 \times 10^8$ கிலோமீற்றர் என்பது மிகப்பெரிய தூரமல்லவா! அத்துடன் சூரியனுக்கும் பூமிக்கும் இடைப்பட்ட தொடர்பு, தூரம் என்பது எல்லாம் சிறப்பான ஒன்று அல்லவா! எப்படி என்கின்றீர்களா? முதலில் கதிரவன், அதுதான் எமது சூரியன் எமது தாய் விண்மீன், கிட்டவாகவுள்ள விண்மீன் நாமறிந்தவரையில் எமது பூமியில் மாத்திரமே உயிரினங்கள் உள்ளன. எனவே இந்த சிறப்பான இணைப்புடைய பூமி கதிரவன் தூரத்தினை வானவியலாளர்கள் ஒரு சிறப்பான பெயரிட்டு அழைக்கின்றார்கள். பூமிக்கும் கதிரவனுக்கும் இடைப்பட்ட சராசரித் தூரமானது ஒரு வானியல் அலகு தூரம் என்கின்றார்கள். ஆக பார்த்தீர்களா $1.49 \times 10^8$ கிலோமீற்றார் என்பது 1 வானியல் அலகு எனக் குறிப்பிடுவதால் குறியீட்டு வடிவில் இலகு ஆகிவிட்டதல்லவா. 1 வானியல் அலகினை AU என குறியிட்டுக் கொள்வார்கள். AU - Astronomical Unit.

அது சரி, எமது பூமியில் மாத்திரம்தான் உயிரினங்கள் உள்ளன என்கின்றாயே, அப்படியாயின் வேற்றுக்கிரக மனிதர்கள், இனம் தெரியாத பறக்கும் பொருட்கள் எல்லாம் சும்மாவா! எனக் கேட்கின்றீர்களா! அது அப்படியல்ல! வேற்றுக்கிரகமனிதர்கள் இருப்பதற்கான சாத்தியங்கள் நிரம்பவே உண்டு. ஆனாலும் சரியான நிருபணங்கள் எதுவுமே இல்லை. அதனால்தான் அப்படியாகக் கூறினேன்.

இதுவரையில் கதிரவனுக்கும் பூமியிற்கும் இடையிலான அளவில் எமது பிரபஞ்சத்தினை அளந்து பார்த்தோம். 5" யில் இருந்து $1.49 \times 10^8$ கிலோமீற்றர்கள் அதாவது 1 AU வரையிலான எமது பார்வையில், பருமனின் ஒப்பீட்டால் நாமும் எமது ஊரும் கண்களுக்குப் புலப்படாத அளவுக்குச் சிறியதாகி விட்டது. பூமி மட்டும் ஒரு புள்ளி போல ஆகிவிட்டது. மிகுதியை மறுமுறை பார்ப்போம்.



**- கனி -**

# இரத்த அழுத்தமும் இன்னல் நீங்க

## நீண்டநாள் வாழ - நினைத்ததை அடைய - (பாகம் - 15)

### *Healing Blood Pressure*

கடந்த இதழ் தொடர்ச்சி

சென்ற இதழில் இரத்த அழுத்த நோய் என்பது பற்றியும், அதன் காரணங்கள், இதன் முக்கிய குணங்கள் என்ற தலைப்பில் சில முக்கியமான தகவல்களை அறிந்து கொண்டோம். எனவே இதன் தொடர்ச்சியாக இந்த நோயைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகளைப் பற்றிப் பார்ப்போம்.

### **கட்டுப்படுத்துதல்** (Control Blood Presure)

உடற்பயிற்சி செய்தல் வேண்டும். உடல் எடையைக் குறைத்தல் வேண்டும். மதுபான வகைகளைக் குடிக்கக்கூடாது. மனக்கவலையைத் தவிர்த்தல் வேண்டும். உப்பைக் குறைத்தல் வேண்டும். சிறுநீரக நோய் இருந்தால் உடனடியாக அதற்குரிய சிகிச்சை பெறவேண்டும். இரத்தக் கொதிப்பு நோயாளிகள் புகைபிடித்தால் நோயின் தீவிரம் அதிகமாகும். கடின வேலையைத் தவிர்க்க வேண்டும். நிறைந்த கொழுப்புச் சத்துள்ள பால், முட்டை, மாமிசம், நெய் போன்றவற்றை முடியுமானவரை தவிர்க்க வேண்டும். மலச்சிக்கல் இல்லாது பார்த்துக் கொள்ள வேண்டும். அதிக குளிருள்ள கால நிலையின் தாக்கத்திலிருந்து தக்கபடி பாதுகாக்க வேண்டும். பெண்கள் கர்ப்பத்தடை மாத்திரைகளை உபயோகிக்கக்கூடாது.

### இந்நோயாளிக்கு உணவுகள்

பச்சைக் காய்கறிகள், சூப் வகைகள், தக்காளி, இளநீர், வெண்ணெய் எடுக்கப்பட்ட மோர், தயிர், எலுமிச்சம்பழச்சாறு போன்றவற்றை தாரளாமாக உட்கொள்ளலாம். மாமிச உணவுகளில் கோழிக்கறி, மீன் ஆகியவற்றை குறைவாக நாள்தோறும் உணவில் சேர்த்துவரலாம். பழங்களில் அப்பிள், பப்பாளி, தோடம்பழம் என்பவற்றை நாள்தோறும் கொஞ்சமாக சாப்பிடலாம்.

### சாப்பிடக் கூடாதவைகள்

நெய், வெண்ணெய், தேங்காய் எண்ணெய் போன்றவற்றை தவிர்க்க வேண்டும். பாயாசம், ஐஸ்கிறீம் போன்ற குளிர்ந்த பதார்த்தங்களை முடிந்தளவு தவிர்க்கவும். திராட்சை, மாம்பழம் என்பவற்றை தவிர்க்கவும்.

இட்லி, தோசை, வெங்காய சட்னி, பச்சைகாய்கறிகள், சாம்பார் சாதம் போன்றவற்றை சேர்க்கலாம்.

### இரத்த அழுத்தம் போக்கும் மூலிகைகள்

1. அவரைக்கீரை, வாழைத்தண்டு, முள்ளங்கி, கொத்தமல்லி, புதினாகீரை, இஞ்சி, வெள்ளாட்டுப்பால்.
2. கீழாநெல்லி இலையை அரைத்து மோரில் கலந்து பருக இந்நோய் குணமாகும்.
3. பூண்டு, வெண்காயம் அதிகமாக சேர்த்து சாப்பிட நோய் குணமாகும்.
4. வெண்தாமரை மலரை அரைத்து சாப்பிட நோய் குணமாகும்.
5. ஆவரசம்பூவை அரைத்து சாப்பிடுதல்.
6. துளசி இலையை அரைத்து சாப்பிடுதல்.
7. உணவில் அதிக பீட்ரூட் சேர்க்கவும்.
8. சீரகத்தை எலுமிச்சம் பழச்சாற்றில் ஊறவைத்து சாப்பிட, இந்நோய் குணமாகும்.
9. அப்பிள், பேரீச்சம்பழம் சாப்பிடுவதால் இந்நோய் குறையும்.
10. அறுகம்புல்லை அரைத்து சாப்பிட இந்நோய் தீரும்.

### யோகாசன சிகிச்சை மூலம் கட்டுப்படுத்துதல்

முறையான யோகசன பிரணாயாமப் பயிற்சிளை தினமும் காலை மாலை செய்து வருவதன் மூலம் இந்த இரத்த அழுத்த நோயை இரண்டு வாரங்களுக்குள் கட்டுப்படுத்தமுடியும். (மருத்தின்றி)

### இது எப்படிச் சாத்தியமாகும்?

எவ்வகையான உடல் உறுப்புகள் (Internal Organs) பாதிக்கப்பட்டு இரத்த அழுத்தம் உருவாகுவதற்கு ஏதுவாகின்றதோ அவ்வகையான உறுப்புகளை யோகாசனப் பயிற்சியின் மூலம் செம்மைப்படுத்துவதன் மூலம் இந்த நோயைக் கட்டுபாட்டுக்குள் கொண்டுவருவது முற்றிலும் சாத்தியமாகும் என்று யோகக்கலை நிபுணர்கள் நிரூபித்துள்ளனர்.

1. பொருத்தமான யோகாசனப் பயிற்சிகள்.
2. இதயத்தை இதமாக்கும் மூச்சுப் பயிற்சிகள்.
3. தியானப் பயிற்சிகள் (ஆழ்நிலை தியானம்)
4. தகுந்த உணவு முறை.
5. இயற்கைக்கு மாறான நடத்தைகளைக் கைவிடுதல்.

இவற்றை அன்றாட வாழ்வின் நடைமுறைப்படுத்தி வந்தால் இந்த இரத்த அழுத்த நோய் (Blood Pressure) இரண்டு மூன்று வாரங்களில் கட்டுப்படுத்தி நாளடைவில் முற்றாக குணமடையச் செய்ய முடியும்.

குறிப்பு - இதில் ஏதேனும் சந்தேகமிருப்பின் என்னுடன் தொடர்பு கொள்ளலாம்.







2007 Tax Savings for Everyone • Épargnes fiscales pour tous




Canadians can also take advantage of a reduction in the lowest personal income tax rate from 15.5% to 15%, and an increase in the Basic Personal Amount to $9,600.

Find out how easy it is to file your tax return online, get information on more programs, or find out how these benefits and credits affect you by visiting:

**canada.gc.ca/taxinfo**

**or call 1-800-959-8281 TTY: 1-800-665-0354**

Les Canadiens peuvent aussi bénéficier d'une réduction du taux d'imposition du revenu des particuliers le moins élevé, qui est passé de 15,5 % à 15 %, ainsi que d'une augmentation du montant personnel de base, qui a été porté à 9 600 $.

Pour voir combien il est facile de produire votre déclaration de revenus en ligne, pour obtenir des renseignements sur d'autres programmes ou pour en savoir plus sur les avantages et crédits qui vous concernent, allez à :

**canada.gc.ca/infoimpot**

**ou téléphonez au 1-800-959-7383 ATS : 1-800-665-0354**

Government of Canada Gouvernement du Canada

Canada

# ஏலம் போ! ஏலம் போ!! காசு மாடு வண்டி வருகுது!!!

## விளையாட்டுத் தகவல்கள் 232

### மாடு பிடித்ததை போல் வீரர்களை பிடித்த அணிகள்

பொதுவாக சந்தைகளில் மாடு பிடிக்கும் போது தரகரும் மாடு பிடிப்பவரும் துண்டால் கைகளை மறைத்து கொண்டு விரல்களால் விலை பேசுவார்கள். இது அருகில் உள்ள வியாபாரிகளுக்கோ அல்லது பிற மாடு பிடிப்பவர்களுக்கோ தெரியாது. அதிக விலை படியும் பட்சத்தில் விலை பேசியவருக்கு மாடு கொடுக்கப்படும். இதைப்போலவே நடந்த ஐ.பி.எல், 'வீரர்களை பிடிக்கும்' ஏலத்தில் ஒரு அணி கேட்கும் தொகை இன்னொரு அணிக்கு தெரியாமல் இரகசியம் காக்கப்பட்டது. ஒவ்வொரு அணியும் ஒரு குறிப்பிட்ட வீரருக்கு நிர்ணயிக்கும் தொகையை ஏல நடுவர் விரலால் 'லேப் டாப்பை' ஒரு தட்டு தட்டி, பட்டியலாக பெற்றுக் கொண்டார். அதில் அதிக தொகையை கேட்ட அணிக்கு அந்த வீரர் 'பிடித்து' கொடுக்கப்பட்டார்.

இந்தியன் பிரீமியர் லீக் - ஏலம் போன வீரர்கள்! விளையாட்டு உலகை அதிர்ச்சியில் ஆழ்த்தி வருகிறது. இந்தியன் பிரீமியர் லீக் (ஐபிஎல்) போட்டி அதில் விளையாடுவதற்கான பிசிசிஐ தேர்வு செய்துள்ள வீரர்கள், எந்தெந்த அணியில் விளையாடப் போகிறார்கள் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஐ.சி.சி ஆதரவுடன் இந்திய கிரிக்கெட் வாரியம் நடத்தத் தீர்மானித்துள்ள ஐ.பி.எல். 20 ஓவர்கள் போட்டி ஏப்ரல் 18 ஆம் திகதி பெங்களூரில் தொடங்குகிறது. மிகவும் எதிர்பார்ப்பை பெற்றுள்ள இப்போட்டி, ரவுண்ட் ராபின் அடிப்படையில் 2 சுற்றுகளாக நடைபெற உள்ளது. ஓர் அணி தனது சொந்த ஊரில் ஓர் ஆட்டத்திலும் அதே அணி எதிர்த்து ஆடும் அணியின் ஊரில் ஓர் ஆட்டத்திலும் விளையாடும்.

லீக் சுற்றுகளில் சேர்க்கும் புள்ளிகளின் அடிப்படையில் 4 அணிகள் அரையிறுதி ஆட்டத்துக்கு முன்னேறும். முதலாவது அரையிறுதி ஆட்டம் மே 30 ஆம் திகதியும் இரண்டாவது ஆட்டம் மே 31 ஆம் திகதியும் நடைபெற உள்ளன. இறுதி ஆட்டம் மும்பை பாரபோஸ் ஸ்ரேடியத்தில் யூன் 1ஆம் திகதி நடைபெறுகிறது.

அப்போட்டியில் பங்கேற்கும் 8 அணிகளை தொழிலதிபர்களும் பிரபலங்களும் ஏலத்தில் எடுத்துள்ளனர். மும்பை அணியை றிலையன்ஸ் அதிபர் முகேஷ் அம்பானியும், பெங்களூர் அணியை மதுபான உற்பத்தியில் புகழ்பெற்ற விஜய் மல்லையாவும் கல்கத்தா அணியை ஹிந்தி நடிகர் ஷாருக்கானும் மொகாலி அணியை ஹிந்தி நடிகை பீரித்தி ஜிந்தாவும், ஹைதராபாத் அணியை டெக்லான் கிரானிக்கல் நிறுவனமும் சென்னை அணியை இந்தியா சிமெண்ட் நிறுவனமும், தில்லி அணியை ஜிஎம்ஆர் ஹோல்டிங் நிறுவனமும் ஜெய்பூர் அணியை எமர்ஜிங் மீடியா நிறுவனமும் விலைக்கு வாங்கியுள்ளன.

அதைத்தொடர்ந்து வீரர்களைத் தேர்வு செய்வதற்கான ஏலம் மும்பையில் நடைபெற்றது. பிசிசிஐ தேர்வு செய்துள்ள 77 வீரர்கள் 8 அணிக்கு விலைபோயினர்.

ஏலம் எடுத்த அணிகள்: ஏலத்தில் ஒவ்வொரு அணியும் வீரர்களை போட்டி போட்டு கொண்டு வாங்கியது. அதிகபட்சமாக ஐதராபாத் அணி. ரூ. 31.4 கோடிக்கு வீரர்களை வாங்க செலவழித்தது. ஏலத்தில் முடிவில் ஒவ்வொரு அணியும் வீரர்களை விலைக்கு வாங்க செலவழித்த தொகை இந்திய ரூபாய்களில்

| அணி | ரூ. கோடியில் |
|---|---|
| ஐதராபாத் | 31.4 |
| சென்னை | 23.6 |
| கோல்கட்டா | 18.92 |
| மொகாலி | 19.79 |
| டில்லி | 19.3 |
| மும்பை | 15.4 |
| பெங்களூர் | 15.2 |
| ஜெய்ப்பூர் | 11.7 |
| மொத்தம் | 156.31 |

'ஆள் பிடிக்கும்' ஐ.பி.எல், ஏலப் போட்டியில் அணிகள் ஆர்வத்துடன் பங்கேற்றன. ஏலத்தில் 77 வீரர்களின் பெயர்கள் இடம்பெற்றன. எட்டு ஐ.பி.எல் அணிகளும் மொத்தமாக சுமார் ரூ. 156 கோடிக்கு வீரர்களை விலை பேசின. இந்திய ரூபாக்களில் வீரர்களின் விலையை இங்கு பார்ப்போம்.

ஐ.பி.எல் அமைப்பு நடத்திய வீரர்களின் ஏலம் மும்பையில் உள்ள ஹில்ரன் ஓபராய் ஹொட்டலில் நடந்தது. ஒவ்வொரு நிறுவனத்துக்கும் தனியாக ஒரு லேப்டாப் அளிக்கப்பட்டது. அதிகபட்சமாக இந்திய அணித்தலைவர் தோனி ரூ. 6 கோடிக்கு விலை போனார். யூனிஸ், வார்ன், மெக்ராத், நிடினி போன்ற அனுபவ வீரர்களை விட இஷாந்த், உத்தப்பா, ரோகித் போன்ற இளம் இந்திய வீரர்கள் அதிகவிலை கொடுத்து வாங்கப்பட்டனர். அவுஸ்திரேலிய தொடரில் அசத்தலாக செயல்பட்டு வரும் இஷாந்த் சர்மா ரூ. 3.8 கோடிக்கும் இர்பான் பதான் ரூ. 3.7 கோடிக்கும் ஆர்.பி.சிங் ரூ. 3.5 கோடிக்கும் ஏலம் எடுக்கப்பட்டுள்ளனர். உத்தப்பா மற்றும் ரோகித் ஆண்டுக்கு ரூ. 3.2 மற்றும் ரூ. 3.0 கோடி கொடுத்து வாங்கப்பட்டுள்ளனர். இத்தொகை ஓராண்டுக்கு வீரர்களுக்கான சம்பளமாக அளிக்கப்படும். வீரர்களை வாங்கிய நிறுவனம் அந்த வீரர்களை 'காட்டி' விளம்பரத்தின் மூலம் சம்பாதித்து கொள்ளும்.

**லட்சுமண் அணித்தலைவர்** - ஐதராபாத் அணியின் அணித்தலைவராக லட்சுமண் தேர்வு செய்யப்படுவார் என தெரிகிறது. இது குறித்து அந்த அணியின் தலைமை நிர்வாகி கூறுகையில், 'லட்சுமண் சிறந்த வீரர். ஐதராபாத் அணியின் நலனுக்காக தனக்கு கிடைக்கவிருந்த நட்சத்திர வீரர் அந்தஸ்தை உதறித் தள்ளினார். இதன் மூலம் அணியின் 'பட்ஜெட்டை' குறைக்க முடிந்தது. அவர் ஐதராபாத் அணியின் அணித்தலைவராக நியமிக்கப்படுவார்' என்றார்.

புக்கானன் பயிற்சியாளர் - கங்குலி தலைமையிலான கோல்ட்டா அணிக்கு அவுஸ்திரேலியாவுக்கு உலக கோப்பை வென்று தந்த வெற்றிப் பயிற்சியாளர் புக்கானன் பயிற்சி அளிக்கவிருக்கிறார். இவரது பயிற்சிக் காலத்தில் கங்குலி தலைமையிலான இந்திய அணி, அவுஸ்திரேலியாவுக்கு கடும் சவாலாக இருந்தது. தற்போது கங்குலி இருக்கும் அணிக்கு பயிற்சி அளிப்பது குறித்து புக்கானன் கூறுகையில், 'இது ஒரு பிரச்சினை இல்லை. இந்தியா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து என பல நாட்டு வீரர்கள் இடம்பிடித்துள்ளனர். இப்படி பல கலாசாரத்தை கொண்ட வீரர்களுடன் விளையாடுவது மகிழ்ச்சி அளிக்கிறது' என்றார்.

**சச்சினை விஞ்சியது தோனி விலை** - ஏலம் மூலம் தேர்வு செய்யப்படாத சச்சின் உள்ளிட்ட நட்சத்திர வீரர்களுக்கு தங்களது அணியில் அதிக விலை வாங்கப்பட்ட வீரர்களை விட 15 சதவீதம் அதிகம் கொடுக்கப்படும். இதன்படி மும்பை அணியில் அதிக ஏலத்துக்கு எடுக்கப்பட்டுள்ள இலங்கையின் ஜெயசூரியாவை விட சச்சினுக்கு குறைந்த பட்சம் 15சதவீதம் அதிகமாக (ரூ. 4.5 கோடி) கிடைக்கும். ஆனால், இது தோனி மற்றும் சைமண்ட்சை விட குறைவு பெங்களூர் அணியின் நட்சத்திர வீரர் திராவிட் ரூ. 4.14 கோடியும், மொகாலியின் யுவராஜுக்கு ரூ. 4.25 கோடியும், கல்கத்தாவின் கங்குலிக்கு ரூ. 3.68 கோடியும், டில்லியின் சேவாக்கிற்கு ரூ3.30 கோடியும் கிடைக்கும்.

ஏலமோ... ஏலம்

**ஜெய்ப்பூர்** - கைப் (இந்திய, ரூ. 2.7 கோடி), யூசுப் பதான் (இந்தியா ரூ. 1.90 கோடி), ஸ்மித் (தெ.ஆ ரூ. 1.90 கோடி), வார்ன் (அவுஸ்திரேலியா ரூ. 1.80 கோடி), முனாப் (இந்தியா ரூ. 11 கோடி) யூனிஸ் (பாகிஸ்தான் ரூ. 90 இலட்சம்) வாங்கர் (அவுஸ்திரேலியா ரூ. 80 இலட்சம்), அக்மல் (பாகிஸ்தான் ரூ. 60 இலட்சம்)

**சென்னை** - தோனி (இந்தியா, ரூ. 6 கோடி), சுரேஷ் ரெய்னா (இந்தியா, ரூ. 2.7 கோடி), ஆல்பி மோர்கல் (தென் ஆபிரிக்கா ரூ. 2.7 கோடி), ஓரம் (நியூசி ரூ. 2.7 கோடி), முரளி (இலங்கை, ரூ. 2.4 கோடி), ஹைடன் (அவுஸ். ரூ. 1.5 கோடி), பிளமிங் (நியூசி. ரூ. 1.4 கோடி), மைக்கேல் ஹசி (அவுஸ் ரூ. 1.4 கோடி), பார்த்திப் படேல் (இந்தியா, ரூ 1.3 கோடி), ஜோகிந்தர் சர்மா (இந்தியா, ரூ. 90 இலட்சம்), நிடினி (தென் ஆபிரிக்கா ரூ. 80 இலட்சம்).

**டில்லி** - சேவக் (நட்சத்திர வீரர்) காம்பிர் (இந்தியா ரூ. 2.9 கோடி), திவாரி (இந்தியா ரூ. 2.7 கோடி), ஆசிப் (பாகிஸ்தான் ரூ 2.6 கோடி), வெட்டோரி (நியூசி, ரூ. 2.5 கோடி), தினேஷ் கார்த்திக் (இந்தியா ரூ. 2.1 கோடி), சோயப் மாலிக் (பாகிஸ், ரூ. 2 கோடி), மெக்ராத் (அவுஸ். ரூ. 1.4 கோடி), டிவிலியர்ஸ் (தென் ஆ. ரூ. 1.2 கோடி), தில்ஷன் (இலங்கை, ரூ. 1 கோடி), மகருப் (இலங்கை, ரூ. 90 இலட்சம்).

**மும்பை** - சச்சின் (நட்சத்திர வீரர்), ஜெயசூர்யா (இலங்கை ரூ. 3.9 கோடி), ஹர்பஜன் (இந்தியா, ரூ. 3.4 கோடி), உத்தப்பா (இந்தியா ரூ. 3.2 கோடி), போலக் (தென். ஆ. ரூ. 2.2 கோடி), மலிங்கா (இலங்கை ரூ. 1.4 கோடி), லூட்ஸ் போஸ்மேன் (தென் ஆபிரிக்கா ரூ. 70 இலட்சம்), பெர்ணான்டே (இலங்கை ரூ. 60 இலட்சம்).

பெங்களூரு - டிராவிட் (நட்சத்திர வீரர்), காலிஸ் (தென் ஆபி. ரூ. 3.6 கோடி), கும்ளே (இந்தியா ரூ. 2 கோடி) ஓயிட் (இங்கி, ரூ. 2 கோடி), ஜாகிர் (இந்தியா, ரூ. 1.8 கோடி), பவுச்சர் (தென்ஆபிரிக்கா ரூ. 1.8 கோடி) , ஸ்டைன் (இந்திய ரூ 1.3கோடி), பிராக்கன் (அவுஸ் ரூ. 1.3 கோடி), சந்தர்பால் (வெ.இ. ரூ. 80 இலட்சம்), ஜாபர் (இந்தியா ரூ. 60 இலட்சம்).

**மொகாலி** - யுவராஜ் (நட்சத்திர வீரர்), இர்பான் பதான் (இந்தியா, ரூ. 3.7 கோடி), பிரட்லீ (அவுஸ். ரூ. 3.6 கோடி), சங்கக்காரா (இலங்கை ரூ 2.8 கோடி), ஸ்ரீசாந்த் (இந்தியா ரூ. 2.5 கோடி), ஜெயவர்த்தனா (இலங்கை ரூ 1.9 கோடி), பியூஷ் சாவ்லா (இந்தியா ரூ. 1.6 கோடி), சர்வான் (வெ.இ. ரூ 90 இலட்சம்), சைமன் கேடிச் (அவுஸ். ரூ. 80 இலட்சம்), ரமேஷ் பவார் (இந்தியா ரூ. 68 இலட்சம்).

**ஐதராபாத்** - சைமண்ட்ஸ் (அவுஸ். ரூ 5.4 கோடி), ஆர்.பி.சிங் (இந்தியா, ரூ 3.5 கோடி), ரோகித் சர்மா (இந்தியா, ரூ. 3 கோடி), கில்கிறிஸ்ட் (அவுஸ். ரூ 2.8 கோடி), அப்ரிதி (பாகிஸ், ரூ. 2.7 கோடி), கிப்ஸ் (தென் ஆபி. ரூ. 2.3 கோடி), லட்சுமணன் (இந்தியா, ரூ. 1.5 கோடி), வாஸ் (இலங்கை ரூ. 80 இலட்சம்), ஸ்டைரிஸ் (நியூசி, ரூ. 70 இலட்சம்), ஜாய்சா (இலங்கை ரூ. 44 இலட்சம்), சமரசில்வா ( ரூ. 40 இலட்சம்).

**கல்கத்தா** - கங்குலி (நட்சத்திர வீரர்), இஷாந்த் (இந்தியா, ரூ. 3.8 கோடி), கெய்ல் (வெ. இ. ரூ. 3.2 கோடி), மெக்கலம் (நியூசி. ரூ. 2.8 கோடி), டேவிட் ஹசி (அவுஸ், ரூ. 2.7 கோடி), முரளி கார்த்திக் (இந்தியா, ரூ. 1.7 கோடி), அக்தர் (பாகிஸ். ரூ1.7 கோடி), பாண்டிங் (அவுஸ். ரூ. 1.6 கோடி), அகார்கர் (இந்தியா, ரூ. 1.32 கோடி), குல் (பாகிஸ். 60 இலட்சம்) தைபு (ஜிம்ப் ரூ. 50 இலட்சம்).



**எஸ். கணேஷ்**


**Raphael Maharaja**

**Barrister, Solicitor & Notary Public**

**கனேடியத் தமிழ் வழக்கறிஞர்**



- வீடு, காணி, வர்த்தகச் சட்டம்
- அகதி, குடிவரவுச் சட்டம்
- விபத்து இழப்பீடு
- குடும்பச் சட்டம்
- தத்துவப் பத்திரம், இறுதி விருப்பாவணம், சத்தியப் பத்திரம்
- ஆங்கில, தமிழ், சிங்கள மொழிபெயர்ப்பு

> Real Estate & Business Law
> Refugee & Immigration Law
> Personal Injury
> Family Law
> Estate Planning, Power of Attorney & Affidavits
> English, Tamil & Sinhala Translation



**Tel: 416-847-7077 Fax: 416-847-7088**

# சிறிய நகரங்களின் வீட்டு விலையில் அதிகரிப்பு ஏற்படும்



நோவ ஸ்கோஷியா வங்கியின் சிறந்த அதியுயர் பொருளாதார நிபுணர் ஏட்றியன் வோறன் இன் கருத்துப்படி, இந்த வருடத்தில் சிறிய நகரங்களில் வீட்டின் விலையில் அதிகரிப்பு ஏற்படலாம் என எதிர்பார்க்கலாம்.

உதாரணமாக ஒன்ராரியோவிலுள்ள Sudbury மற்றும் Saskatoon ஐக் குறிப்பிடலாம். இதற்கு காரணமாக Demand, Supply மற்றும் Affordability ஐக் கொள்ளலாம். இந்த இரு நகரங்களுக்கு மேலே குறிப்பிட்ட மூன்று காரணிகளும் காணப்படுகின்றது.

கடந்த வருடத்தில் (2007) கனடாவில் அதிகூடிய விலை அதிகரிப்பு ஏற்பட்ட ஐந்து நகரங்கள் Saskatoon, Edmonton, Regina, Calgary மற்றும் Sudbury ஆகும்.

இவற்றினுள் Sudbury மற்றும் Saskatoon என்ற நகரங்கள் இவ்வருடம் விலை அதிகரிப்பில் முன்னிற்கு வரலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. அல்பேட்டாவில் ஆஸ்தி சந்தையில், முந்தைய காலங்களில் ஏற்பட்ட விலை அதிகரிப்பால் மக்களால் மாதாந்த கொடுப்பனவு கட்டுக்கடங்காமல் போய்விட்டது. இதனால் ஏற்கனவே விற்பவர்களுக்கு சார்பாக அடித்த காற்று வாங்குபவர்களிற்கு சார்பாக இப்பொழுது மாறிவிட்டது.

சிறிய நகரங்களில் விலை $300,000 இற்கு குறைவாகக் காணப்படுவதால், விலை அதிகரிப்பு இவ்வருடமும் ஏற்படுவதை எதிர்பார்க்கலாம். இரண்டாவது உலக மகாயுத்தத்திற்கு பிற்பாடு ஏற்பட்ட வீட்டு விலை அதிகரிப்பில், 1997 இல் ஏற்பட்ட விலை அதிகரிப்பே மிக நீண்ட அதிகரிப்பாக காணப்படுகின்றது. அனேகமாக இந்த நிலைமையில் மாற்றம் ஏற்படலாம். எனவே ஏட்றியன் வோறன் குறிப்பிட்டுள்ள விலையில் 3.5% அதிகரிப்பு ஏற்படலாம். விற்கப்படும் எண்ணிக்கையில் 4% இறக்கத்தை காணலாம்.

கடந்த ஒன்பது வருட அதிகரிப்பில் சராசரியாக 65% அதிகரிப்பு விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது என ஏட்றியன் வோறன் தெரிவித்துள்ளார். உதாரணமாக ரொறொன்ரோவில் கடந்த வருடம் (2006 இலிருந்து 2007வரை) விற்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 12.2% ஆலும் விலை 7.5% ஆலும் (2007 இல் சராசரி விலை $376,873, 2006 இல் சராசரி விலை $350,616) அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இதற்கு முந்தைய விலை அதிகரிப்பு ஆண்டுக்கான 1960, 1970 மற்றும் 1980 களில் இந்த அதிகரிப்பு 32% இலிருந்து 56% ஆகக் காணப்படுகின்றது. மற்றும், இந்தக் கால கட்டத்தில் கொண்டோக்களை முதல் தரம் வாங்குபவர்களும், வயதானவர்களும் வாங்குவதாலும், தனி வீடுகளின் மாதாந்த கட்டுப்பணத்தின் அதிகரிப்பாலும் 2008 இல் தனி வீட்டின் விலையில் மந்தம் ஏற்படலாம்? இதனால் இந்த வருடத்திலும் அடுத்த வருடத்திலும் அடுக்குமாடி கட்டிடத்தின் விற்பனை அதிகரிக்கும் என எதிர்பார்க்கலாம்.

1980 களில் ஏற்பட்டது போன்ற பாரிய இறக்கத்தை (Correction) எதிர்பார்க்க முடியாது. இதற்கு பல காரணங்கள் முன்வைக்கலாம்.

1. வீட்டுச் சந்தையில் விற்காமல் இருக்கும் வீடுகளின் எண்ணிக்கை மிகக்குறைவு.

2. நிதி நிறுவனங்களின் Developers இற்குரிய மிகக் கடுமையான Construction Loan நிபந்தனைகள்.

3. விலை அதிகரிப்பை எதிர்பார்த்து வாங்குனர்களின் எண்ணிக்கை மிகக்குறைவு (Less Speculators)

4. சராசரி விலை அதிகரிப்பு 6% 80களுடன் ஒப்பிடும் போது (10%) மிகக்குறைவு.

5. 80களில் மிக அதிகமான, விற்கப்படாத வீடுகள் சந்தையில் இருந்தது.

6. இப்பொழுது சகல கட்டிட உரிமையாளர்களும் மிகவும் கவனமாக புதிய கட்டிடங்களை சந்தைக்கு கொண்டு வருகின்றனர்.

எனவே அனேகர் எதிர்பார்ப்பது போல பாரிய விலை இறக்கத்தை எதிர்பார்க்க முடியாது.

**நாமும் நமது இல்லமும்**

ராஜா மகேந்திரன்

**தொடர் - 270**


ஸ்காபரோ, மிசிசாக இரு இடங்களில், 100இற்கு மேற்பட்ட வெற்றிபெற்ற வீட்டுப்பிரதிநிதிகள்



**HomeLife GTA Realty Inc.,** Brokerage*

"கனவு உங்களுடையது பொறுப்பு எங்களுடையது"

1711 McCowan Rd. #206, Toronto - **416.321.6969**
145 Traders Blvd # 28, Mississauga - **905.712.2666**

Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)

HOMELIFE HIGHER STANDARDS

*Independently owned & operated



**OPEN HOUSE**

10% Deposit

10% Deposit

**Red Hot Condos (Ph-1) @** North of Eglinton & Donmills

Saturday & Sunday - March 01 & 02, 2008 - Between 12:00 to 4:00pm

தொடர்புகளுக்கு 416.321.6969 / Your HomeLife GTA Sales Reps.

Over $10,000 Discount

No Floor Premium

• Some Conditions Apply

Nantha Aiyadurai
Cell: 613 850 9931

COLDWELL BANKER COBURN REALTY

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்

Buying or Selling

Relocation Service
OTTAWA>>><<<GTA



நந்தா ஐயாத்துரை

Business: 613 823 7555 Fax: 613 825 8177 3777 Strandherd Drive, Nepean, Ontario K2J 4B1

# சுழல் அசைவுகளில்



காற்றில் கலந்துவரும்
நிகழ்கால நீரோட்டம்

எல்லோரும்
அறிந்துகொள்ளவேண்டிய
நிகழ்கால நீரோட்டம்

கல்லூரி வெளிகளில்
பல்கலைக்கழகக் கல்வியில்
படமாளிகையில்
பூங்கா மறைவுகளில்
நூல்நிலைய
அறிவு நிலையங்களில்

முக்கனியில்
வலைப்பின்னலாகின்றன
இளசுகளின்
இதயப் பந்துகள்

அகரத்தின் சொண்டில்
உரசுகின்றன
அகிலமொழிகளின் உதடுகள்

சிரிப்பொலியில் பிணைகின்றன
தாய்மொழிகள்
இழந்த பிஞ்சுகள்

புத்திஜீவித் தீக்கோழிகள்
பொரித்த குஞ்சுகள்

அந்தக் கருவிழிகளின்
கூட்டம்
எதுவித எழுத்துமின்றி
பேசிக்கொள்ளும்
வார்த்தைகள்:

'யாயும் ஞாயும்
யாராகியரோ' ?



முத்துராஜா

# திருவொட்டு சுட்டான் தான் தோன்றீச்சரம்

பண்: திருநேரிசை

புதுக்கிட நிலத்தைத் தீர
புத்திரர் வெட்ட வந்தார்
விதம்வித அற்பு தத்தால்
வெளியுல கறிய வைத்தார்
உதித்தொரு கதிர வன்போல்
ஒட்டுசுட் டானில் உள்ளார்
கதிக்கொரு கொழுகொம் பான
கடவுளை வணங்கு வாமே.

மட்டிலாக் காலந் தொட்டு
மண்ணிலே மறைந்தி ருந்தார்
வெட்டிடக் குருதி சிந்தி
வியப்புற வன்னி மக்கள்
நிட்டையை விடுத்துத் தானே
நிலத்தின்மேல் தோன்றி நின்றார்
ஒட்டுசுட் டானில் உள்ளார்
உருகியே வணங்கு வாமே.

கண்ணிலே குருதி காட்டிக்
கண்ணைமுன் அப்ப வைத்தார்
திண்ணமாய் அதனைத் தீர
புத்திரர் தெரியக் காட்டி
உண்ணிலம் இருந்து தோன்றி
ஒட்டுசுட் டானில் உள்ளார்
பண்ணினாற் பரவிப் பாடிப்
பதமுற வணங்கு வாமே.

நீட்டிய துயிலை நீக்கி
நீணிலம் காணத் தோன்றிக்
காட்டினை நாட தாக்கிக்
கவிந்தபே ரிருளை எல்லாம்
ஓட்டிடக் கோயில் கொண்டே
ஒட்டுசுட் டானில் உள்ளார்
வாட்டமில் லாத வாழ்வை
வழங்குவார் வணங்கு வாமே.

வேடுவர் ஐவர் தொல்லை
வென்றிடக் கருணை செய்வார்
காடுகள் தம்மை வெட்டிக்
கழனிகள் ஆக்கச் செய்வார்
பாடுகள் நோக்கித் தக்க
பயன்களை வழங்கி நிற்பார்
பீடுகொள் ஒட்டு சுட்டான்
பிறங்கினர் வணங்கு வாமே.

கூட்டினைத் திறந்து விட்டார்
குயில்களைப் பறக்க விட்டார்
காட்டினை நோக்கி மக்கள்
கடலெனத் திரள விட்டார்
கேட்டவை கொடுத்து நின்றார்
கேடுகள் கெடுத்து நின்றார்
வாட்டமில் ஒட்டு சுட்டான்
வளர்கிறார் வணங்கு வாமே.

புலிகளை வளர விட்டார்
புகலிடம் வழங்கி நின்றார்
வலம்வரும் யானை கட்கும்
வகுத்தனர் நிலத்தை வேறாய்
நலமிகு காட்டு வாழ்வை
நாட்டவர் படிக்கத் தக்க
நிலைமைகொள் ஒட்டு சுட்டான்
நிமலரை வணங்கு வாமே.

குயில்களின் பாடல் கேட்பார்
குரங்குகள் கூத்துக் காண்பார
மயில்களின் ஆடல் மற்றும்
மான்களின் நடையும் காண்பார்
தயிரினில் வெண்ணெ யாகத்
தண்ணிழல் ஒட்டு சுட்டான்
வியன்மிகு கோயில் உள்ளார்
வீழ்ந்தடி வணங்கு வாமே.

பசுக்களை மேய்த்து நிற்பார்
பசியினைத் தீர்த்து வைப்பார்
இசையியல் நாட கத்தால்
இடர்களை இறக்கி வைப்பார்
விசைகெடுத் தாள வல்லார்
வீடுபே றளிக்க வல்லார்
திசைபுகழ் ஒட்டு சுட்டான்
தேவரை வணங்கு வாமே.

தோற்றமும் முடிவும் இல்லார்
கூற்றையும் உதைக்க வல்லார்
மாற்றங்கள் எதுவும் இல்லார்
நேற்றின்று நாளை இல்லார்
வேற்றுமை சிறிதும் பாரார்
ஆற்றல்கொள் ஒட்டு சுட்டான்
போற்றுதான் தோன்றி யாரைப்
போற்றிநாம் வணங்கு வாமே.

திருவொட்டுசுட்டான் முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்துள்ள பழமைவாய்ந்த கோயில். 1500ஆம் ஆண்டளவில் யாழ்ப்பாணம் இடைக்காட்டுத் தீரபுத்திரர் குடும்பத்தால் அமைக்கப்பெற்றது.

இறைவர்: தான்தோன்றீசுவரர்.
இறைவி: பூலோகநாயகி.



கவிஞர் வி. கந்தவனம்

# றோயல் வங்கி துடுப்பாட்டத்திற்கு *(Cricket)* உதவுகிறது




றோயல் வங்கி கனேடிய பாடசாலைகளை துடுப்பாட்டதில் ஈடுபடுத்துவதற்காக உபகரணங்களையும் பண உதவிகளையும் வழங்க முன்வைத்துள்ளது. இவ் உதவி கனடாவின் ஆரம்ப பாடசாலை மாணவர்களை (2ஆம் வகுப்பில் இருந்து 6ஆம் வகுப்புவரை) துடுப்பாட்டத்தில் ஈடுபடுவதற்கு தூண்டுவதற்காக வழங்கப்பட உள்ளது. "நாங்கள் இந்த துடுப்பாட்ட விளையாட்டை கனடாவில் கட்டி எழுப்புவதற்கு விரும்புகிறோம்." என றோயல் வங்கியின் கலாசா பிரிவிற்கு பொறுப்பாக இருக்கும் முகாமையாளர் Mark Whitmell கூறுகிறார்.

இதுவரை ரொறொன்ரோவில் உள்ள 400 பாட-சாலைகள் இவ்வுதவியை பெற பதிவு செய்துள்ளன. மேலதிக விவரங்களுக்கு http:www.rbc.com/cricket இணையத் தளத்திற்குச் செல்லவும். இவ் இணையத் தளத்தில் பதிவு செய்யும் பாடசாலைகளுக்கு இலவசமாக இளைஞர்களுக்கான துடுப்பாட்ட மட்டைகள் (Youth - sized bats), பந்து மற்றும் Wickets என்பவற்றை றோயல் வங்கி வழங்குகிறது. இவற்றுடன் விளையாட்டு விதிகள் அடங்கிய விவரக்கொத்து (Resource Guide) மற்றும் செயன் முறை பயிற்சி விளையாட்டுக்கள் பதிவு செய்யப்பட்ட DVD என்பனவும் றோயல் வங்கியால் வழங்கப்படுகிறது.

The students at Vradenburg J.P.S. in Scarborough, who play cricket in Tim Stone's physical education class, participated in a training video for the *RBC Wicket Cricket program*. Mr. Stone, along with cricket advocate Melvin John, supported RBC in the creation of this new youth cricket program.

## கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின்
# கவிதா நிகழ்வு

கடந்த 19.02.2008 பி.ப. 3.00 மணிக்கு ஸ்காபுரே சிவிக்சென்ரர் கேட்போர் கூடத்தில் எழுத்தாளர் இணையத்தின் தலைவர் ஆர். என். லோகேந்திரலிங்கத்தின் தலைமையில் 'நிழல் தேடி வந்த மண்ணில்' என்னும் தலைப்பில் கவிதா நிகழ்வு இடம்பெற்றது. இணையத்தின் செயலாளர் த.சிவபாலு அவர்கள் அனைவரையும் கவிதையிலேயே வரவேற்றார். தலைவரின் அறிமுகத்தோடு கவிதைக் களம் களைகட்டியது. கவிஞர்கள் காலம் செல்வம், செழியன், கோதை அமுதன், அன்புடன் புகாரி, சித்தி விநாயகம், அனலை ஆறு. இராசேந்திரம் ஆகிய ஆறு கவிஞர்களின் கவிதைகள் இடம்பெற்றன. சித்தி விநாயகத்தின் கவிதையோ கனடிய மண்ணில் படும் அவலங்களை அடுக்கடுக்காய் புட்டுப் புட்டு வைத்ததைக் காணமுடிந்தது. புகாரியின் கவிதையோ அடைக்கலந்தந்து வரவேற்ற மண்ணை மதித்துப் போற்றுவோம், வாழ்த்துவோம் வாழுவோம் என்று இருந்தது. அனலை ஆறு. இராசேந்திரத்தின் கவிதை வெண்பாவிலும், ஆசிரியப்பாவிலும் சிந்தடியிலும் சிறப்புற தாயகத்தின் அவலத்தை எடுத்துரைத்தது. கோதை அமுதனின் கவிதையோ உறவுகளின் அவல நிலையை உணர்த்தி உதவப் பணித்தது. காலம் செல்வத்தின் கவிதை பழைய நினைவுகளை மீட்டுத்தந்தது. செழியனின் கவிதையோ மனிதநேயத்தைப் போதித்தது. இவ்விதமாக கவியரங்கு மிகவும் சிறப்பான முறையிலே அமைந்தமைக்கு தலைவரின் அறிமுகக் கவிதையும் மெருகூட்டியது எனலாம்.

இறுதியாக பண்டிதர் மா.செ. அலெச்சாந்தர் அவர்கள் நல்லவற்றை நாம் படைக்கவேண்டும், அல்லாதனவற்றை ஒதுக்குதல் வேண்டும் என்று கருத்துத் தெரிவித்தார். செயலாளரின் நன்றியுரையுடன் கவிதா நிகழ்வு நிறைவுற்றது. அடுத்த கவிதா நிகழ்வு எதிர்வரும் ஏப்பரல் முதலாம் வாரத்தில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. கவிதா நிகழ்வில் கலந்துகொள்ள விரும்புவோர் செயலாளர்: த. சிவபாலுவுடன் 416-546-1394 தொடர்பு கொள்ளலாம்.

# வாழ்க்கை சுவர்க்கமாவது இனிய இல்லமொன்றில்...

**Ellesmere/Morningside**



**$114,900**
2 Bedrooms, 1 Washroom, Condo Townhouse, Good Location, Close To U Of T, Convenient Location, Centennial College

**Neilson/Mclevin**



**$164,500**
2 Bedrooms, 2 Washrooms, Condo Apt, Bright And Spacious With A Gorgeous View! Gated Community, Ttc Nearby

**Kennedy/Eglinton**



**$214,900**
2+1 Bedrooms, 2 Washrooms, Condo Apt, Immaculately Clean And Spacious Unit With Unobstructed South View

**Lawrence/Morningside**



**$269,900**
3+2 Bedrooms, 2 Washrooms, Public Transportation. Good Condition. Plaza Close

**Sheppard/Morningside**



**$275,000**
3 Bedrooms, 2 Washroom, Att/Row/Twnhouse, Mattamy Built Townhome Only 3 Ys.Old. Clean,Tidy & Well-Maintained Just Like New

**Neilson/Sheppard**



**$279,900**
3 Bedrooms, 2 Washrooms, Detached Backsplit 4, Main Entrance With Double Door. Georgeous, Must See Both Inside & Outside

**Mccowan/Steeles**



**$309,900**
3 Bedrooms, 2 Washroom, Link 2-Storey, Excellent Home For Starter Lots Of Potential, Very Convienant Location, Is Ready For Any Budget

**Mccowan/Denison**



**$309,900**
3 Bedrooms, 2 Washrooms, Link 2-Storey, Absolutely Well Maintained Home In Great Location.Close To Yrt,Ttc,Places Of Worship

**Markham & Steeles**



**$315,000**
3 Bedrooms, 3 Washroom, Att/Row/Twnhouse, Immaculately Maintained Beautiful Bright Spacious Freehold T/H!!

**Mccowan/Denison**



**$334,900**
3 Bedrooms, 4 Washroom, Link 2-Storey, Approx 1600 Sf Remington Home 3 Bedroom With Finished Basement New Windows

**Mccowan/Denison**



**$339,000**
4 Bedrooms, 3 Washroom, Link 2-Storey, Finished Bsmt W/ One Bedroom & New 3Pc Washroom, Oak Staircase, 4Pc & 2Pc Washroom

**9th Line / 14th**



**$379,900**
4 Bedrooms, 3 Washroom, Brick And Stone Front Semi Detached In A Prime Markham Area. Cornor Lot On A Quite Crescent, 2100Sq Ft.

**Finch/Morningside**



**$399,000**
5 Bedrooms, 3 Washrooms, Detached 2 Storey, Gorgeous Home With Premium 115 Feet Pie Shaped Lot, Hardwood In Living

**Mcvean/Castlemore**



**$399,900**
4 Bedrooms, 3 Washroom, Detached 2-Storey, Absolutely Immaculate Property In One Of Bramptons Finest Location, $$ Spent Upgraded

**Middlefield/Denison**



**$399,900**
4 Bedrooms, 3 Washroom, Link 2-Storey, Def Decorated Like A Model Home, A1 From Top To Bottom, Too Many Upgrades To List

**Middlefield/Highglen**



**$399,900**
3 Bedrooms, 3 Washroom, Link 2-Storey, Absolutley Well Maintained 2130 Sq Ft(As Per Bldrs Plan), Main Floor Study Rm, Prof Fin Bsmt

**Morningside/Sheppard**



**$424,900**
4 Bedrooms, 4 Washroom, Detached 2-Storey, Prestigious Mattamy Built.Premium Corner Lot(45 Feet By 97.54 Feet). Double Door Entry

**W.9th Line/N.14th**



**$499,900**
5 Bedrooms, 4 Washrooms, Detached 2 Storey

**Taunton/115**




**$1,500,000** **Plus Stock**
Very Good Opportunity For Investment. This Money Making Busy Gas Station Is Located In The Heart Of Canada's Fastest Growing Oshawa Area

**Kingston/Brock**



**$38,000** **Plus Stock**
3 Bedrooms, 3 Washroom, Location, Location, Location. Busy Plazza(7 Days Open), Family Bussiness, Turn Key Operation, Easy To Operate

***New Retail/Restaurant Units Available for SALE/LEASE***

**I can also assist you with: Mortgage Financing, Home Inspection, Real Estate Lawyer**



digi Media Creations - 416.467.4952


# Elaguppillai (Mike) Srinathan, B.Sc.

Sales Representative

## Direct: 416.276.1225

esrinathan@trebnet.com
**HOMELIFE/GTA Realty Inc.** 1711 McCowan Rd., Suite 206, Toronto, ON M1S 3Y3


HOMELIFE HIGHER STANDARDS


Niru
நிரு
பிராண்ட்
BRAND
Niru ®
JACK
MACKEREL
IN BRINE
தொடர்பிற்கு தொலைபேசி.
காட்சிக்கு தொலைக்காட்சி.
இணையத்திற்கு கணனி.
உணவிற்கு நிரு பிராண்ட்.
MARKETING BY TAMIL SOURCE
Niru BRAND
Drained Weight/ Poids Égoutté/ 300g.e
300g.e

# சுவாசித்தே நோய்களை குணமாக்கவும் தடுக்கவும் ஒரு சுலபமான பயிற்சி மூலப்பயிற்சி

நொடிப்பொழுதில் நோய்களை தீர்க்கவும், நோய்களை தடுக்கவும் வல்ல ஞானசரம் என்னும் சுவாசப்பயிற்சி முறை.

(`Wonderful Healing' of ALL diseases by Breathing)

நாசிகளை மாற்றி சுவாசப்பயிற்சி செய்ய முடியாதவர்கள் முதலில் இதைப்பயிலவும். ஓரிடத்தில் அமர்ந்து நேராக இருக்கவும், அதாவது முன்னுக்கு பின்னுக்கு வளையாது நிமிர்ந்து இருக்கவும். இப்போ வாயை நன்கு இறுக மூடிக்கொள்ளவும். வாய்க்குள் நாக்கை கீழ்முரசுடன் அமர்த்திவைத்துக் கொள்ளவும் (அப்போதுதான் உடம்பிலுள்ள அத்தனை தசைகளும் தளரும்). இப்போ கண்களையும் மூடிக்கொள்ளவும். இப்போ மூச்சை 1,2,3,4,5,6 எண்ணி உள் இழுக்கவும். இழுத்த மூச்சை ஆறு எண்ணும் நேரத்திற்கு உள்ளே வைத்திருக்கவும். இதன்பின் 12 எண்ணும் வரை மூச்சை வெளியே விடவும். இப்படி 15முறை செய்யவும். இப்படிச் செய்யும்பொழுது, வயிறு மூச்சு வெளிவிடும்போது உள்ளே செல்லவேண்டும். பின் மூச்சை உள் இழுக்கும்போது வயிறும் தொப்புழும் மேலே வரவேண்டும், இதை தவறாது அவதானிக்கவும். இப்படித்தினம் மூன்று முறையாவது செய்யவும். ஆரம்பஸ்தர்களுக்கு பல நோய்களை குணமாக்கவும் தடுக்கவும் இதுவே போதுமானது.

*ஞானசரம் என்னும் சுவாசப்பயிற்சி செய்முறை*

ஞானசர சாஸ்திரமென்பது எமது சித்தர்களால் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் கண்டுபிடிக்கப் பட்டு பதினெண் சித்தர்கள் என்னும் புராதன நூலில் விளக்கப்பட்டுள்ளது. இதில் எமது வாழ்க்கையை சீர்செய்வதற்கும் திடமாக வாழ்வதற்கும் பலவேறு விடயங்கள் விளக்கப்பட் டுள்ளன. இதில் சிலவற்றையே வழங்குகின்றேன்.

இந்த ஞானசரம் என்னும் சுவாசப்பயிற்சி பயில்வது எப்படி என்பதை கவனிப்போம். ஒரு காற்றோட்டமான இடத்தில் நிமிர்ந்து அமரவும். தரையில் ஒரு விரிப்பில் அமரலாம். வேண்டுமானால் ஒரு நாற்காலியிலும் அமர்ந்து கொள்ளலாம். தரையில் இருப்பதானால் கால்களை முழங்கால் அளவில் நன்கு மடித்து அமரலாம். யோகாசனம் தெரிந்தவர்கள் 'பத்மாசனம்' நிலையில் அமர்ந்து கொள்ளலாம். இரு கைகளையும் ஆரம்பத்தில் மணிக்கட்டு முழங்காலில் படும்படி வைத்துக்கொள்ளலாம். தலையையும் கழுத்தையும் நேராகவைத்துக் கொள்ளவும். நாரி நன்கு நிமிர்ந்து இருத்தல் அவசியம். இப்போ வாயை நன்கு மூடி மூக்கால் சுவாசத்தை உள் இழுக்கவும். இழுக்கும் பொழுது குளிர்ந்த காற்று உள் செல்வதை அவதானிக்கவும். வாய்க்குள் இருக்கும் நாக்கு மூச்சு உள் இழுத்து வெளி விடும்பொழுது மேல் நோக்கி உயராது வைத்துக்கொள்ளவும். (நாக்கு மேல்நோக்கி உயர்வது உடம்பு இறுக்க நிலையில் இருப்பதைக் குறிக்கும். (Tension)

**டாக்டர். சி.வ. பரராஜசிங்கம், PPh.D**
Holistic Practitioner (Canada)
Nutrition & Fitness (Canada)
'யோக சித்தர்' வவுனியா, இலங்கை -
Tel. - 416.291.3022 /E.Mail -
DRVPS@Hotmail.com

எனவே சுவாசப் பயிற்சியின்போது நாக்கை வாய்க்குள்ளே கீழ் முரசுடன் வைத்திருத்தல் அவசியம். இது உடம்பைத் தளர்த்த (Relax) உதவும். சுவாசத்தை உள்ளே இழுக்கும்பொழுது மனதால் 1,2,3,4,5.6 என்று எண்ணி உள் இழுக்கவும். இப்போ ஆறு எண்ணும் நேரத்திற்கு மூச்சை உள்ளே வைத்திருக்கவும். இதன்பின் மனதால் 12 எண்ணும் நேரத்தில் மூச்சை வெளியே விடவும். இப்படி ஆறு அல்லது 15 முறை பரீட்சிக்கலாம். தினம் இருவேளை காலை, மாலை செய்யலாம். இதனால் மனம் ஸ்திரப்படும். சில நாட்கள் பயின்றால் மனம் அலைவது குறையும் மனோபலம் அதிகரிக்கும். இதனையே ஆழ் நிலைத்தியானம் என்பர். இந்த முறைப்படியே உடம்பிலுள்ள உறுப்புக்களில் தோன்றும் நோய்களை நீக்குவதற்கு கையாளப்படும் ஜீவ உறுப்பு அவதானச்சிகிச்சை முறை (Biofeedback Therapy) சாத்தியமாகிறது. இதன் பிரகாரம் உடம்பில் எப்பாகத்திலாவது வலி, விறைப்பு, எரிவு, துடிக்கும் உணர்ச்சி அல்லது எவ்வித அசௌகரியம் தோன்றினாலும் உள் இழுக்கும் மூச்சானது அவ்விடத்தில் படுவதாக எண்ணி அப்படி அந்த மூச்சு அவ்விடத்தில் பட்டதும் அந்த அசௌகரியம் நீங்குகிறது என்றும் எண்ணிச் சில முறை பரீட்சித்தால் அந்த அசௌகரியம் நீங்குவதை நீங்களே கண்டு வியப்படைவீர்கள்!. இது எமது சித்தர்களும் யோகிகளும் தமது நோய்களைத் தாமே தீர்க்க கையாண்ட தெய்வீக முறையாகும். எவரும் இதை பயின்று சித்தியடையலாம்!. இதன் காரணத்தாலேயே சைவ சமயத்தில் விநாயகர் கவசம், கந்த சஷ்டி கவசம், கந்தர் அனுபூதி முதலிய பாடல்களில் எமது உடம்பு உறுப்புக்களின் ஒவ்வொன்றையும் குறித்து தியானித்து ஓதப்படுகிறது. இதனால் மனம் அவ்விடத்தை அவதானிப்பதால் அவ்விடத்திற்கு அதிக ஜீவ அணுக்கள் சேர்ந்து அவ்விடம் நன்கு போஷிக்கப்பட்டு அந்த அசௌகரியம் நீங்கிவிடுகிறது.

இந்த சுவாசப்பயிற்சி செய்யும் பொழுது முக்கியமாக கவனிக்க வேண்டிய ஒரு செயற்பாடு உளது. அது யாதெனில் வாயை மூடி மூக்கால் மூச்சை உள் இழுக்கும் போது தொப்புளும், வயிறும் மேலுக்கு வரவேண்டும். வாயைமூடி மூக்கால் மூச்சை வெளி விடும் போது தொப்புளும், வயிறும் உள்ளே செல்லவேண்டும். இப்படி சுவாசிக்கும்போது வயிறு மேலெழுந்து பின் சுவாசத்தை வெளிவிடும் போது நன்கு உள்செல்லாவிடில் இந்த சுவாசப்பயிற்சியால் பிரயோசனமில்லாது போய்விடும். எனவே இதை நன்கு அவதானிக்க வேண்டும். சுவாசம் வெளிச்செல்லும் போது வயிறும் தொப்புளும் உள்செல்லாவிடில் உங்கள் பெருவிரலை தொப்புளுக்கு சுமார் இரண்டு அங்குலம் மேலே வயிற்றின் மேல்ப்பாகத்தில் வைத்து மென்மையாக உள்ளுக்கு அமுக்கிய வண்ணம் மூச்சை வெளியே விட்டு பின் பெரு விரலை எடுத்துவிட்டு மூச்சை உள் இழுக்கவும், அப்படி உள் இழுக்கும் போது வயிறு மேலுக்கு வருவதை அவதானித்து, அதன்பின் சுவாசத்தை வெளி விடும்போது மீண்டும் பெருவிரலால் மேல் வயிற்றை அழுத்தவும். எமது நாசியில் உள்ளே சென்று வெளியே வரும் சுவாசம் எப்போதும் இரு நாசிகளிலும் ஒரேபலத்தில் இருப்பதில்லை!. இதை நாம் நாசிக்கு கீழ் எமது சுட்டு விரலைக் குறுக்கே வைத்து அதன்மேல் சற்று பலமாக எமது மூச்சை (சுவாசத்தை) விட்டு பரீட்சிக்கலாம். அதாவது எமது மூச்சானது ஒரு நாசியில் பலமாகவும் மறு நாசியில் பலங்குறைந்தும் காணப்படும். இதை எமது மூதாதையர் நன்கு பரீட்சித்து கண்டறிந்திருந்தனர். வலது நாசியில் வரும் சுவாசத்தை 'பிங்கலை' அல்லது 'சூரியகலை' என்றும், இடது நாசியில் வரும் சுவாசத்தை 'இடகலை' அல்லது 'சந்திரகலை' என்றும் அழைத்தனர். இரு நாசிகளிலும் சமமான வேகத்தில் வருவதை 'சூனியம்' அல்லது அக்கினி என்றும் அழைத்தனர். ஒரு நாசியில் பலமாக வரும் சுவாசம் சுமார் ஐந்து நாளிகை அதாவது இரண்டேகால் மணித்தியாலம் அந்நாசியில் பலமாக ஓடிப்பின் மறு நாசியில் பலமாக ஓட ஆரம்பிக்கும், அங்ஙனம் மாறுகையில் இருநாசிகளிலும் சுமார் பத்து மாத்திரை (ஒருமுறை கண் இமைத்தல் ஒரு மாத்திரை) சமனாக ஓடும், இதை சூனியம் அல்லது அக்கினி எனப்படும். இதை நன்கு அவதானிப்பதால் மனோசக்தி பலப்படும் என்பதை அறிந்து அதன் பிரகாரம் தமது மனோசக்தியைப் பலப்படுத்தி பல அரும்பெரும் சாதனைகள் புரிந்தனர் எமது சித்தர்களும் யோகிகளும்.



(தொடரும்)


**SHAWN TRUCK & FORKLIFT DRIVING SCHOOL**

Excellent Quality - Low Cost Training

Truck licence A-Z
From $599.00



In Classes

365 (Learning Permit)
Dangerous Goods
Border Crossing
Air Brake (Z)
Log book

- A-Z & D-Z up grade • One on One Training
- Job Placement Right Away!
- உடனடி வேலை வாய்ப்புக்கள்
- வாரத்தில் ஏழு நாட்களும் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் பயிற்சிகள் வழங்கப்படும்.



Air brake

Fork Lift licence
From $75.00

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்: *Pl. Call: Raja / Shan*

**416.913.9574/416.829.0603**

40 NUGGET AVE., #8, Scarborough East (McCowan & Sheppard)



mhc

**MOHAN HOMEOPATHIC CLINIC & MASSAGE CLINIC**

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

**TEL: 416-298-7537/416-291-3022**

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# வால்பாறை - பசுமையும் குளுமையும்

## தமிழ்நாடு சுற்றுலா இடங்கள்- 33

கோயமுத்தூர் மாவட்டத்தில் பொள்ளாச்சிக்கு அருகே இருக்கும் அழகிய சிறிய மலைநகரம், வால்பாறை. பொள்ளாச்சியிலிருந்து பத்து கிலோமீட்டர் கடந்து சென்றதும், மலைப்பாதை ஆரம்பிக்கும் இடத்தில் மலையடிவாரத்தில் விஸ்வரூபமாக விரிந்து கிடக்கிறது ஆழியார் அணைக்கட்டு. அதனைக் கடந்து, வளைந்து நெளியும் மலைச்சாலையில் குலுங்கி, தளும்பிக்கொண்டே செல்லும் வாகனத்தில் சில கிலோமீட்டர்கள் ஏறியதும் குரங்கு நீர்வீழ்ச்சி வரும். பெயருக்கு ஏற்றாற்போல ஏகப்பட்ட குரங்குகள் அருவியைச் சுற்றியும் நின்று நம்மை வரவேற்கிறார்கள். குற்றால அருவி அளவுக்கு பிரமாண்டமாய் இல்லை என்றாலும், குளிப்பதற்குச் சுகமானதாகத்தான் இருக்கும். மலைப்பாதியில் மேல் நோக்கிய பயணத்தில், இப்படி சின்னச் சின்ன குட்டி சந்தோசங்கள் வழிநெடுக விதைக்கப்பட்டு இருக்கின்றன. ரசிக்க நாம்தான் நல்ல மனநிலையில் இருக்கவேண்டும். மொத்தம் நாற்பது கொண்டை ஊசி வளைவுகள். பதின்மூன்றாவது வளைவில் திரும்பி



நிமிரும்போது, மேலே இருந்து ரயில் பூச்சியைப் போல ஊர்ந்து இறங்கி வரும் வாகனங்கள், கடந்து வந்த உயரத்தின் திகைப்பை உணர்ந்தும் பரவசம் அடையச் செய்யும். இரண்டு மணி நேர பயணத்துக்குப் பிறகு, மலைச்சரிவு வீடுகளோடு தூரத்தில் கண் சிமிட்டும் வால்பாறை நகராட்சி நம் பயண அனுபவத்தை இன்னும் குசிப்படுத்தும்.

வால்பாறையில் பார்க்க வேண்டிய இடங்கள் அனைத்தும் திக்குக்கு ஒன்றாகப் பிரிந்து கிடக்கின்றன. எனவே, ஒரு சுற்று வந்து பார்த்துவிட்டு ஒருநாளில் திரும்பிவிடுவது சாத்தியமல்ல. நின்று, நிதானித்து வால்பாறையின் மொத்த அழகையும் அள்ளிப்பருகவும், வாழ்க்கை நெருக்கடிகளில் இருந்து விடுபட்டு மனதுக்கு நல்ல அமைதி கிடைக்கவும் குறைந்தது இரண்டு நாட்களாவது வால்பாறையில் தங்க வேண்டும். அதனால், முதலில் அறை போட்டுவிட்டு, பயணக் களைப்பு நீங்க சிறு ஓய்வு எடுத்துவிட்டு நம் பயணத்தைத் தொடங்கலாம். வால்பாறையில் அவசியம் நமக்கு ஒரு வழிக்காட்டி தேவைப்படுவார். எங்கு திரும்பினாலும் தேயிலைத் தோட்டங்களாக இருப்பதால், ஒவ்வொரு நூறு அடிக்கும் இடமும் வலமுமாக கிளைச்சாலைகள் பிரிந்து செல்கின்றன. எது நாம் செல்லவேண்டிய சாலை என்பதை விசாரிக்க பக்கத்தில் ஒரு ஈ, காக்கா கூட இருக்கமாட்டாது. வால்பறையில் டாக்ஸி வாடகைக்கு அழைத்திருந்தால் ஓட்டுனரே வழிகாட்டியாக இருப்பார். டாக்ஸி இல்லாமல் வால்பாறையைச் சுற்றிப் பார்க்கவும் முடியாது.

முதலில்... பாலாஜி கோயில். நகரிலிருந்து சில கிலோமீட்டர் தொலைவில் தேயிலைத் தோட்டங்களுக்கு மத்தியில் அமைந்திருக்கிறது பாலாஜி கோயில். தனியாருக்கு சொந்தமான கோயில் என்றாலும் அமைந்திருக்கும் இடம், சுற்றிலும் பரந்து கிடக்கும் ஆன்மீக பேரமைதி காரணமாக இது ஒரு சுற்றுலாத் தலமாகவே



**வழிப்போக்கன்**

மாறிவிட்டது. திருப்பதி வெங்கடாஜலதியைப் போன்றே விக்கிரகம் கொண்ட இந்த கோயிலின் முழு பிரகாரமும் பளபள சலவைக் கற்களால் ஆனது. பாலாஜியை வணங்கிவிட்டு அப்படியே நின்று சுற்றிப் பார்த்தால், தேயிலைத் தோட்டங்களில் கொழுந்தைக் கிள்ளும் பெண்கள், சிறு புள்ளிகளாக மலைச்சரிவு எங்கும் தென்படுகிறார்கள். தொழிலாளர்களில் பெரும் பாலானோர் இரண்டு, மூன்று தலைமுறைகளுக்கு முன்பு திருநெல்வேலி பகுதியிலிருந்து பஞ்சம் பிழைக்க வந்தவர்கள். இப்போது மலையே இவர்களுக்கு வாழ்வாகிப்போயிற்று. பேச்சில் வீசும் நெல்லைத் தமிழ்வாசம் மட்டும் பூர்வீகத்தைச் சொல்லும் அடையாளமாக மிச்சமிருக்கிறது.

அடுத்தது... எரச்சிப் பாறை நீர்வீழ்ச்சி. இரண்டு பாறை இடுக்குகளுக்கு இடையே, மலையின் மர்மங்களோடு கொட்டுகிறது தண்ணீர். பார்க்க கொள்ளை அழகுதான் என்றாலும் ஒரு சின்னக் குறை குளிக்க முடியாது. கொட்டும் நீர், ஓடையாக ஓடிவரும் இடத்தில்தான் குளிக்க முடியும். அதுவும் அள்ளித்தான் குளிக்க வேண்டும். அருவித் தண்ணீரை அள்ளிக் குளிப்பதும் ஒரு அற்புத அனுபவம்தான். குடித்தால் சர்க்கரையாய் தித்திக்கிறது தண்ணீர். இந்த அருவி இருக்கும் இடமும் தனியாருக்கு சொந்தமானதுதான். வால்பாறையில் அரசு மற்றும் தனியாருக்குச் சொந்தமான தேயிலைத் தோட்டங்களும், தேயிலைத்தூள் தயாரிக்கும் தொழிற்சாலைகளும் நிறைய இருக்கின்றன. பறிக்கப்படும் தேயிலை, அடுத்த 24 மணி நேரத்துக்குள் தேயிலை தூளாக மாறிவிடுகிறது. பிறகு விற்பனைக்கு வந்துவிடும். அந்த ருசி மிகுந்த தேயிலைக் காட்டை வேடிக்கை பார்த்துக்கொண்டே, மேலும் பத்து கிலோமீட்டர் பயணம் செய்தால் நீரார் அணை வரும். மலைகளின் மடியில் விரிந்து படர்ந்திருக்கும் நீர்த்தேக்கம், தன் பேரழகால் நம்மை வசீகரிக்கிறது. நீரார் அணையில் வியந்து



விழி விரிக்க இன்னொரு விசயமும் உண்டு. அணையின் ஒரு முனையில், மலைக்குக் கீழாக குகை அமைத்து, அந்தக் குகை வழியே சுமார் ஒன்பது கிலோமீட்டர் தூரத்துக்குச் சென்று வெளியேறுகிறது தண்ணீர். மேலே காட்டு மரங்களாகவும் தேயிலைத் தோட்டங்களாகவும் காட்சிதரும் மலைகளுக்கு கீழே, ஒரு ஆறு ஓடிக் கொண்டிருக்கிறது என்பதே ஆச்சரியமூட்டுகிறது. நீரார் அணையின் குகைக்குள்ளே புகும் தண்ணீர், வெள்ளைமலை என்ற இடத்தில் வெளியேறு கிறது. அப்படியே மேலும் சில கிலோமீட்டர்கள் பயணம் செய்தால் அதனையும் பார்க்கலாம்.

அடுத்தது... சின்னக் கல்லார் அணை. இது ஒரு சிறிய தடுப்பணைதான். இதன் அருகிலேயே சின்னக் கல்லார் அருவி கொட்டுகிறது. தலைமுட்டும் உயரத்தில் இருந்துதான் நீர் கொட்டுகிறது என்பதால், அதில் குளிப்பதை விட நீர்வீழ்ச்சி தடாகத்தில் பயமின்றி ஆனந்தமாக நீந்துவது சுகம். அங்கிருந்து புறப்பட்டதும், ஒரு மணி நேரத்தில் வால்பாறை நகரம் உங்களை வரவேற்கும். லாட்ஜுக்கு சென்று நல்ல பிள்ளையாக இரவைக் கழித்துவிட்டு அடுத்த நாள் மற்ற இடங்களைச் சுற்றுப் பார்க்கலாம். சாயங்காலம் தொடங்கி காற்றில் பரவும் குதூகல குளிர் கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்துக்கொண்டே வரும். கம்பளிக்குள் அடைக்கலம் புகுந்து சுருண்டு படுத்தால் அவ்வளவு பேரானந்தமாக இருக்கும்.

வால்பாறையில் பார்க்க வேண்டியவற்றில் மிக முக்கியமானது சோலையார் அணைக்கட்டு. பல கிலோமீட்டர் நீளத்துக்கு பிரமாண்ட ஏரியாக பரந்து விரிந்து கிடக்கிறது. அணைக்கட்டின் கரையில் எதுவுமே செய்யாமல் சும்மா வெறுமனே உட்கார்ந்து இருந்தால் போதும். அவ்வளவு இனிமையான அனுபவமாக இருக்கும். சோலையாறிலிருந்து கிளம்பினால் அடுத்தது நம்பர் ராக் என்று சொல்லப்படுகிற மயிலாடும் பாறை. கிட்டத்தட்ட கேரள எல்லைக்கு மிக அருகில் இருக்கிறது இந்த இடம். மயிலாடும் பாறைக்கு வாகனத்தில் வரமுடியாது. எனவே, காரை ஒரு கிலோமீட்டருக்கு முன்பே பாதுகாப்பான ஒரு இடத்தில் நிறுத்திவிட்டு நடந்துதான் வரவேண்டும். மயிலாடும் பாறை அருகிலேயே தற்கொலைகளுக்கு புகழ்பெற்ற பள்ளத்தாக்கு ஒன்று இருக்கிறது. அங்கிருந்து சில கிலோமீட்டர் தொலைவில் நல்லமுடி பூஞ்சோலை பள்ளதாக்கு. இரண்டு பள்ளத் தாக்குகளுமே மிரட்டும் அனுபவங்கள். மார்கழி மாதத்தில் இங்கு வந்தால் மலையெல்லாம் மஞ்சள் பூக்கள் சிரிக்கும் என்பார்கள். அங்கிருந்து பிரிய மனமில்லாமல் கனத்த இதயத்தோடு, வால்பாறைக்குத் திரும்பும் வழி யில் சாலையோரம் பாய்ந்தோடுகிறது கூழாங்கல் ஆறு. படுகை முழுவதும் கூழாங்கற்களே நிறைந்திருப்பதால் இந்தப் பெயர். பெரும்பாலும் சுற்றுலாப் பயணிகள் இந்த ஆற்றைக் கடக்கும் போது, கூழாங்கற்களில் ஒன்றை நினைவுக்கு எடுத்துச் செல்கின்றனர்.

நமது வீட்டில் அலமாரியிலோ, தோட்டத்திலோ, மேஜையிலோ ஒரு செல்லப்பிராணி போல அமர்ந்திருக்கும் கூழாங்கல் நம் கண்ணில் படும் ஒவ்வொரு முறையும் வால்பாறை அனுபவங்களை நினைவூட்டும். சிறு கணம் நிதர்சன உலகை மறக்கச் செய்து, மனதின் ஆழத்தில் பயணப்படச் செய்யும். விறுவிறுவென எரிந்து மறையும் நட்சத்திரம் போன்ற பேரனுபவம் அது.

### எப்படி செல்வது? எங்கே தங்குவது?

கோயமுத்தூரில் இருந்து பொள்ளாச்சி சென்று அங்கிருந்து வால்பாறை செல்ல வேண்டும். பொள்ளாச்சியில் இருந்து 65 கிலோமீட்டர் தொலைவில் இருக்கிறது வால்பாறை. கோவையில் இருந்து பொள்ளாச்சிக்கும், அங்கிருந்து வால்பாறைக்கும் பேரூந்து போக்குவரத்து இருக்கிறது. வால்பாறையில் சுற்றிப் பார்க்க டாக்ஸி வாடகை ஒரு நாளைக்கு 750 ரூபாய்.

வால்பாறையில் 350 ரூபாயிலிருந்து 1,000 ரூபாய் வரைக்கும் லாட்ஜ்களில் அறைகள் வாடகைக்குக் கிடைக்கின்றன. இதைத் தவிர, தனிமையும் குளுமையும் இணைந்த தனி வீடுகளை காட்டேஜ்களாக மாற்றி ஒரு நாளைக்கு 750 ரூபாய்க்கு வாடகைக்கு விடுகிறார்கள். ஒரு குடும்பம் தாராளமாகத் தங்கலாம். சோலையார், சின்னக் கல்லார் மற்றும் நீரார் அணைக்கட்டுகளில் பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான விருந்தினர் இல்லங்கள் உள்ளன. குறைந்த எண்ணிக்கையிலேயே அறைகள் இருக்கின்றன என்றாலும், பேரமைதிக்கு ஏற்ற இடம். இங்கே அறை எடுத்து தங்க, வால்பாறை பொ.ப.து. அலுவலகத்தில் முன்பதிவு செய்யவேண்டும்.

வால்பாறையில் உணவுக்கு சிரமமில்லை. ஆனால், சைவம் மட்டுமே சமைக்கிற ஓட்டல் என்று ஒன்று கூட கிடையாது. எனவே, சைவக்காரர்கள் முதலிலேயே சொல்லி வைத்தால் சமைத்துத் தருவார்கள். மலையில் சுற்றிப் பார்க்கும் இடங்களில் ஓட்டல்கள் இல்லை. தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்கிறவர்களுக்காக ஆங்காங்கே பாதையோரங்களில் சில டிபன் கடைகள் இருக்கின்றன. நன்றாக சாப்பிடவேண்டும் என விரும்புகிறவர்கள், வால்பாறையிலிருந்து கிளம்பும்போதே உணவு பொட்டலம் வாங்கி வைத்துக்கொள்வது நல்லது.


**ELROD RENOVATIONS**

- Kitchen
- Washroom
- Hardwood Flooring
- Laminate Flooring
- Tilling
- Pluming
- Electrical Work
- Painting
- Separate Entrance
- Full Basement



Free Estimate & Consultation

Call now at: 416-712-1016 Celestine (Prem)

# WELCOME TO GTA SQUARE

**Middlefield/Finch Scarborough**

## 5215 Finch Ave-E, Scarborough, ON, M1S 0C2

## *We started our Business since DEC 12/2007

---

*

# RVL

ELECTRONIC INC.

Repairs, Sales & Service



Call : Ravi

(Licensed Technician)

416-265-1208

416-988-0965

LCD TV's, Projection TV's Plasma TV's, Car Stereo's

And All Types of Electronics Devices

---

*

# KRISHNA'S



TAILORING

TEXTILES & GIFTS

(416) 497 6427

---

# EAGLE'S DRY CLEANERS & ALTERATIONS

** FREE PICK-UP & DELIVERY**

(416) 291 9777



"Certain Conditions"

---

*

# UNIQUE FINANCIAL



Business Solutions Inc.

(416) 854 6183

---

## ASHMITHA BUSINESS CENTRE

- COPY & PRINT
- *Black & White copy from 2.5 cents*

- Brochure
- Letterheads
- Postcards
- Door Hanger
- Business Cards
- Notepads
- Bookmarks
- Greeting Cards

*GTA Square Mall: Unit 159*

416-298-0505

---

## FREE TO AIR SATELLITE SYSTEM

> For Installation, System Upgrading, Security Camera & House Alarm



- Sun TV
- Apunj
- Pak TV
- Surya TV
- Gemini TV
- Zee TV
- KTV
- B4U
- Kairali
- Sony TV
- Cricket
- And More

*GTA Square Mall: Unit 105*

416-670-8248

---

## SAJECHO

*Electronics & Computers*

> Sales - Service - Repair & Upgrade

*GTA Square Mall: Unit 105*



416-916-3357

# கொடிய நோய்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு காப்புறுதி நிவாரணம்

## CRITICAL ILLNESS INSURANCE

## வினா விடை தொடர் - 15 -

### கொடிய நோய்களுக்கான காப்புறுதி திட்டத்தில் காப்புறுதி நட்டஈடு தவிர மேலதிகமாக வழங்கும் சலுகைகள் யாவை?

கொடிய நோய்க்கான காப்புறுதி ஒப்பந்தத்தில் சேர்ந்தவர்களுக்கு, ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட தொகை நட்டஈடாக வழங்கப்படும் உடன்படிக்கை தவிர மேலதிகமான சில சலுகை களும் வழங்கப்படுகின்றன. அவையாவன!

**நோய்க்குரிய உதவி சலுகை**
(ILLNESs ASSIST BENEFIT)


சிவ. பஞ்சலிங்கம் B. Com,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999


இதனை ஆங்கிலத்தில் பின்வருமாறு தெளிவு படுத்தப்பட்டுள்ளது.

'Illness assist benefit' provides you with a lump sum benefit of up to $ 25,000 for one occurrence of either, but not both of the following events.

If you receive a written diagnosis for one of these forms of cancer
a. Ductall breast cancer
b. Early prostate cancer
c. HIV related cancer
d. Superficial malignant melanoma.
If you undergo coronary angioplasty

அதாவது உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டது போல நட்டஈடு வழங்கும் நோய்களில் ஒன்றான 'புற்றுநோய்' என்பது வாழ்வினை மிரட்டும் ஆபத்தான புற்றுநோயாக (Life threatening cancer) இருத்தல் வேண்டும். இல்லாது இருந்தால் மட்டுமே நட்டஈடு கிடைக்கும் என்பதும், சிலவகையான உயிர் ஆபத்தில் இருந்து தப்பிக்கொள்ள கூடிய மேற்குறிப்பிட்ட சிலவகையான புற்றுநோய்களுக்கு நட்டஈடு கிடைக்கமாட்டாது என்பதும் ஒப்பந்தங்களின் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

உதாரணமாக பெண்களுக்கு வரும் மார்பக புற்று நோய் என்பது சிகிச்சையில் மார்பகம் அகற்றப்பட்டால் முற்றாக இதில் இருந்து விடுபட சந்தர்ப்பம் உண்டு. இதுபோல் தோலில் ஏற்படும் கருமை நிறம் போன்ற சிறு புற்று நோய் கட்டி, ஆண்களுக்கு உயிரசை விந்து சுரக்கும் கலங்களில் ஏற்படும் புற்றுநோய் (Early Prostate Cancer) சிகிச்சையில் தப்பி விடலாம்.

ஆனால் இங்கு உயிர் ஆபத்தில் இருந்து தப்பி விடக்கூடிய மேற்குறிப்பிட்ட புற்றுநோய்களுக்கு $15,000 டொலர் வரை ஒரு உதவி சலுகை பணம் மேலதிக தொகையாக இவ் ஒப்பந்தத்தில் வழங்கப்படும். இதுபோலவே 'இருதய நோய்' (Heart Attack) என்னும் நட்டஈடு வழங்கும் கொடிய நோயில் இவ் இருதய நோய்க்கு உரியவர் இருதயத்தினூடாக ஓடும் குருதி சுற்றோட்டத்தில் தடையினை 'கதிர் வீச்சு அலை' (Coronary Angioplasty) என்னும் சிகிச்சை மூலம் தீர்வு காணும் நிலைமை ஏற்பட்டாலும் ஒப்பந்தத்தின் உடன்படிக்கையில் குறிப்பிட்ட நட்டஈடு கிடைக்கமாட்டாது. ஆனால் மேலதிக உதவி சலுகை மட்டும் $25,000 டொலர் வரை கிடைக்கும்.

இம்மேலதிக தொகையான உதவி சலுகை என்பது ஒன்று மட்டுமே வழங்கப்படும்.

**சத்திரசிகிச்சைக்கான முற்பண சலுகை**
***(Surgery Advance Benefit)***
இக்கொடிய நோய்களுக்கான காப்புறுதி ஒப்பந்தத்தில் ஒப்பந்த தொகையினை விட மேலதிகமாக சுமார் $15,000 டொலர் வரை வழங்கப்படும் ஒரு முற்பண சலுகையே இதுவாகும்.

ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட கொடிய நோய்களில் ஏதாவது ஒன்றினால் ஒப்பந்தத்தில் வரைவிலக்கணத்தில் குறிப்பிடப்பட்ட நிலையில் பாதிக்கப்பட்டு, இந்நோய்க்குரியவர் சத்திர சிகிச்சைக்கு செல்லும் நிலைமை ஏற்பட்டால் மேலதிகமாக இப்பணத்தொகை வழங்கப்படும்.

**உலகின் திறமையான மருத்துவர்களின் இலவச சிகிச்சை வசதிகள்**
***(Best Doctors Service)***
கொடிய நோய்களுக்கான காப்புறுதி ஒப்பந்தத்தில் சேர்ந்த ஒருவர், ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட கொடிய நோய்களில் ஏதாவது ஒன்றினால் பாதிக்கப்பட்டிருக்கும் நிலைமையில் இப்பாதிப்பு என்பது ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட வரைவிலக்கணத்தினுள் இருக்கும் போது நட்டஈடு பெறுவது மட்டுமல்லாது, இவ் ஒப்பந்தத்தினை வழங்கிய சில கம்பனிகள் நோய்வாய்ப்பட்டவருக்கு மேலும் ஒரு இலவச சலுகையினை வழங்குகின்றது. அது உலகில் எங்கு சென்றாலும் திறமையான மருத்துவர்களின் சிகிச்சையில் ஏற்படும் செலவுகளை பொறுப்பு எடுப்பதாகும்.

கொடிய நோயால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு நோய் உறுதிப்படுத்தப்பட்டு முதல் மூன்று வருடங்களில் மேற்கொள்ள வேண்டிய அவசர சத்திரசிகிச்சைகள் அல்லது ஏதாவது தேவையான சிகிச்சைகள் உடனடியாக கனடாவில் கிடைக்க வில்லையானால் கம்பனி யினால் அங்கீகரிக்கப்படுகின்ற உலகின் எந்த மருத்துவ நிலையத்திலும் போய் சிகிச்சையினை பெற்றுக் கொள்ளலாம். அதற்குரிய செலவுகளை ஒப்பந்தம் வைத்திருக்கும் காப்புறுதி கம்பனியில் இருந்து பெறலாம். ஒரு மில்லியன் டொலர் வரை வழங்கப்படும் இச்செலவில் $10,000 டொலர் வரையான பிரயாண செலவும் அடங்கும். ஆனால் இத்தகைய சிகிச்சைக்குரிய செலவினை கம்பனி யில் இருந்து பெற்று கொள்ளும் நேரத்தில் சிகிச்சைக்கு செல்ல முன்பு ஒழுங்கு முறையில் அங்கீகாரங்களை பெற்ற பின்பே செல்ல வேண்டும். ஏனெனில் சில குறிப்பிடப்பட்ட நோய்களுக்கு மட்டும், நிலைமைக்கு ஏற்ற மாதிரியே இதன் அங்கீகாரம் வழங்கப்படும்.




APARTMENTS FOR RENT



In a NEWLY Renovated High-Rise Apartment Building
Clean, Utilities inclu. Free parking. Close to TTC, Tamil store in building, schools nearby

Pl. Call: 416.264.2818



EXPERT BUILDING INSPECTIONS LTD

"Dedicated to Expert, Honest & Independent Inspections"

Tel: 905 940 0811 Fax 905 940 6108
Toll Free 1 866 373 3315

- Commercial Building Inspections
- Environmental Assessments
- Air Quality Investigations
- Problem Analysis & Solutions
- New Home Warranty Inspections
- Resale Home Inspections
- Complete Home Audit
- Thermal Imaging

www.expertinspector.com

- Tough and Thorough Inspections by University of Toronto educated Building Science Experts Specializing in Defect Recognition
- Our Inspectors are Registered Home Inspectors under the Province of Ontario 1994 Home Inspectors Act-Bill 158 and full members of ASHI and CAHPI-Ontario
- Exceed Nationally Recognized Standards
- Important Maintenance Advice & Follow Up Support For First Time Buyers
- On-Site Narrative Reports
- Seven Days a Week

ASHI MEMBER
CAHPI Ontario

# உறுதியான உயர் வாழ்வு

## ஓடும் நீர் உறைவதில்லை 56

இந்த உலகில் நாம் எவ்வாறு வாழ்கிறோம் என்பது எவ்வாறு அளவிடப்படுகின்றது என்பது பெரும்பான்மையானவர்களுக்குப் புரியாத புதிர் ஏதோ ஒன்றை அடைவதன் மூலம் ஓர் உயர்வைப் பெற்றுவிடலாம் என்ற எதிர்பார்ப்பில் வாழ்வின் ஒவ்வொரு கணப்பொழுதும் செலவிடப்படுகின்றது. ஒன்றை அடையும் வரைக்கும் கடுமையாக உழைப்பதும், ஊன் உறக்கமின்றித் திரிவதுமாக எமது வாழ்வின் பெரும் பகுதியை நாம் பயன்படுத்தி விடுகின்றோம். மிகவும் கடினமான உழைப்பாலோ அல்லது மிக இலகுவான வழிமூலம் நாம் எதிர்பார்த்த இலக்கை அடைந்ததன் பிற்பாடு நாம் எதிர்பார்த்த திருப்தி அல்லது ஆனந்தம் கிடைப்பதில்லை. இதனால் புதிதாக ஒன்றைத் தேடுவதும் ஓடுவதுமாக நம் வாழ்க்கை நகர்கின்றது.

நாம் ஒவ்வொருவரும் எந்த நிலையில் இருந்தாலும் கூட அடுத்த நிலைக்கு நம்மை உயர்த்துவதிலேயே ஈடுபடுகின்றோம். இந்த உயர்வுகள் பொருளாதார ரீதியாகவோ அல்லது புகழ், அந்தஸ்து, அறிவியல் என்ற அடிப்படையிலோ அமைவதாக எண்ணுகிறோம். ஏனெனில் உயர்வான வாழ்வு என்பது பலருடைய பார்வையில் மற்றவர்கள் எவ்வாறு தம்மை மதிப்பிடுகிறார்கள் என்பதால் நிர்ணயிக்கப்படுகின்றது என்று கருதப்படுவதேயாகும். அதாவது சமூக பொருளாதார அடிப்படையில் மற்றவர்களை விட உயர்வாக கருதப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பு இந்த நிலைக்கு அவர்களைத் தள்ளி விடுகின்றது. இதற்காகப் பலர் தம்மை அறியாமலேயே சமூக பொருளாதார தவறுகளை ஏற்படுத்திவிடுகிறார்கள். சிலர் அவ்வாறான தவறுகளுக்குள் அகப்பட்டு பின்னர் அதிலிருந்து மீள முடியாமல் தவிக்கிறார்கள்.

நடைமுறையில் பலர் மூன்று வழிகளில் ஏதாவது ஒரு வழிமூலம் தமது வெற்றிப்பாதையை எட்டிவிட முயற்சிக்கின்றார்கள். பணம் அல்லது பொருளாதார ரீதியில் ஓர் உயர்வான வாழ்க்கையை அமைத்துக் கொள்ளலாம் என முயற்சித்துக் கொண்டிருக்கின்றனர் சிலர். சமூகத்தில் நல்லதொரு மதிப்பைப் பெற்றுவிட வேண்டும் என்பதற்காக அயராது உழைப்பவர்கள் இன்னும் சிலர். அறிவியல் ரீதியில் தன்னை உயர்த்துவதன் மூலம் தன்னை உயர்த்தி விட முயற்சிப்பவர்கள் வேறு சிலர். இவ்வாறாக ஒவ்வொருவரும் தமது அறிவியல் அனுபவங்களுக்கேற்ப தமது தீர்மானங்களை முன்னெடுத்துச் செல்கின்றனர். ஒப்பீட்டளவில் இவ்வாறான முயற்சிகள் ஒருவருக்குச் சிறப்பான உயர்வான வாழ்க்கையைக் கொடுக்கின்றது என்ற ஒரு தோற்றத்தை மற்றவர்களுக்கு கொடுத்தாலும் அவர்களுக்கு அதன் யதார்த்தம் வெளிப்படையாகத் தெரிந்த விடயமாகும். அதாவது தமது எதிர்பார்ப்புகளும், அதற்கான நடவடிக்கைகளும் அதன் விளைவுகளும் அவரது எதிர்பார்ப்புக்கு இயைபாக அமையவில்லை என்ற உண்மை அறியப்பட்டிருக்கும். இருப்பினும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில், அதிபெரும்பான்மையானவர்கள் அவற்றை வெளிப்படுத்த விரும்புவதில்லை. இதற்கு தம்மைப்பற்றிய சமூகத்தின் பார்வை உண்மையானதாக அமையக் கூடாது என்பதில் அதிக கவனத்தைச் செலுத்துபவர்களாக இவர்கள் இருப்பார்கள். பொருளாதார ரீதியில் தம்மை உயர்த்துவதன் மூலம் ஒரு உயர்வான வாழ்க்கையை அமைக்க முடியும் என எண்ணுபவர்களில் இருவகையானவர்கள் உளர். இவர்கள் இருவரும் ஒரே நோக்கத்திற்காகச் செயற்பட்டாலும், செயற்பாட்டின்தன்மை எதிர் மாறானதாக அமைந்திருக்கும்.

பொருளாதார உயர்வால் உயர்வான வாழ்க்கையை அமைக்க முடியும் என்ற நோக்கத்தைக் கொண்டவர்களில் ஒருவகையினர், அந்த நிலையை அடைவதற்குப் பல இழப்புக்களைப் பரிசாகக் கொடுத்திருப்பார்கள். குடும்பநேரம், குழந்தைகளுடனான சிறப்பு நேரம், உடல்நலம் என மிகவும் பெறுமதிவாய்ந்த விடயங்களை விலையாகக் கொடுத்து முயற்சிப்பார்கள். இந்த விலைக்கான பரிசை அவர்கள் அறுவடை செய்யும் போது அதன் பலன்களை அனுபவிக்க கூடிய குடும்ப அமைப்போ அல்லது குழந்தைகளின் ஒத்துழைப்போ அல்லது வரவேற்போ அல்லது அவரது உடல் நலமோ அந்த உயர்வின் பலனுக்கு உறுதுணையாக அமைவதில்லை. அதாவது அவரது முயற்சியின் பயன் அவரால் இழக்கப்பட்டவையுடன் ஒப்பிடப்படும் போது மிகச் சிறியதாக இருப்பதும் அதனால் உயர்வான வாழ்க்கை என்பது பொருளாதார ரீதியான உச்ச நிலையல்ல என்பதும் உணரப்படுகின்றது.

பொருளாதாரத்தை அடிப்படையாக எண்ணும் அடுத்தவகையினர் போலியான பொருளாதார நிலையைக் கொண்டிருப்பார்கள். இவர்கள் குதிரைக் கொம்பில் கொடியைக் கட்டுபவர்கள். பொருளாதார ரீதியில் தன்னைப்பற்றிய மற்றவர்களது பார்வைகள் உயர்வாக அமையவேண்டும் என்பதற்காக போலியான பொருளாதாரத்தைக் கட்டி எழுப்ப முயல்வார்கள். இவர்கள்தான் தமது இயல்புக்கும் இயலாமைக்கும் அப்பாற்பட்ட பொருளாதாரத் தெரிவுகளைப் போலிக் கௌரவத்திற்காக மேற்கொள்வார்கள். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தவறான நீண்டகாலச் சொத்துக்களை அல்லது மிகக் குறுகிய காலத்தில் அதிக பெறுமதியை இழக்கும் விடயங்களில் தம்மிடம் இல்லாது பணத்தை முதலீடு செய்வார்கள். இவர்களது ஆரம்பகால இழப்புக்கள் குறைவாக இருப்பினும் நீண்டகாலத்தில் மீளமுடியாத பொருளாதார இழப்புக்களைச் சந்திப்பார்கள். அதுமட்டுமல்ல இந்தப் போலியான பொருளாதார அமைப்பு உடைக்கப்படும் போது குடும்பத்துக்குள், கணவன் - மனைவி - பிள்ளைகளுக்கு இடையே விரக்தியும் மன உளைச்சலும் உருவாக்கப்படுகின்றது. எனவே உயர்வான வாழ்க்கை என்பது பொருளாதார உயர்வால் அமைவதல்ல என்பது இங்கு உறுதிப்படுத்தப்படுகின்றது.

> அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகையிலும் ஒலிவடிவில் வாரம் தோறும் திங்கட்கிழமைகளில் இரவு 9.30 மணிக்கு கீதவாணி வானொலியிலும் இடம்பெறுகின்றன. இயலுமானவரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.
> *நன்றியுடன் k. G Master*

இப்போது இரண்டாவது வகையினரைப் பற்றி ஆராய்வோம். உயர்வான வாழ்க்கைக்கு சமூகத்தில் ஒரு உயர்ந்த அந்தஸ்தைப் பெறுவது தான் அடிப்படை எனக்கருதுபவர்கள் தான் இவர்கள். இவர்களது நடத்தைகளும் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டவர்கள் போல் இருவகைப்பட்டதாக அமையும். முதலாமவர் சமூகத்தில் ஒரு உயர்ந்த மதிப்பைப் பெறவேண்டும் என்பதற்காகப் பல தனிப்பட்ட மதிப்புக்களை விலையாகக் கொடுப்பார்கள். இந்த விலைகளில் மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுவது தமது குடும்பத்தின், குடும்ப அங்கத்தவர்களின் உடலியல் உளவியல் நலன். 'ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளைதானாக வளரும்' என்பவர்கள் இவர்கள். இவர்களால் அறியப்படாத விடயம் என்னவெனில் ஊட்டாவிட்டால் எந்தப் பிள்ளையும் வளராது என்பது தான். சுய கௌரவத்திற்காகச் சமூகத்திலே சிறந்த அந்தஸ்து இருப்பதாகச் சமூகத்திலே சிறந்த அந்தஸ்து இருப்பதாகக் காட்டிக் கொள்ளும் இவர்களின் பெரும்பாலான குடும்பங்கள் மனத்தால் இணைக்கப்படாமல் தன்மானத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காக இணைக்கப்பட்டிருப்பதைப் பலர் புரிந்து கொள்வதில்லை. இருப்பினும் காலப்போக்கில் இந்த உண்மை புலப்பட்டுவிடும். ஆனால் அது காலம் தாழ்த்திய புரிதலாக அமைவதும் துரதிஷ்டவசமானதே.

இரண்டாவது வகையினர் தாமாகவே தம்மை சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்து உள்ளவர்களாக்கிக் கூத்தாடுபவர்கள். 'ஆலை இல்லா ஊருக்கு இலுப்பைப்பூ சர்க்கை' என்பது போல் ஏதோ ஒருவழியில் சமூகத்தில அந்தஸ்துப் பெற்றிருப்பதான ஒரு பிரமையுடன் வாழ்பவர்கள். இவர்களுக்குச் சொல்புத்தியும் இருக்காது சுய புத்தியும் இருக்காது. ஊருக்கு மட்டுமே உபதேசம் செய்பவர்கள் இவர்கள். நாளடைவில் உண்மை நிலை வெளிப்பட்டதும் இவர்களது கற்பனையான உயர்வாழ்க்கை உதிர்ந்து விடும். இவர்களது போலித்தனத்திற்கான பரிவு சுயதண்டனையாக அமைகின்றது.

**KG Master 416.725.5112**

அறிவியல் ரீதியில் ஒருவர் தன்னை உயர்த்துவதன் மூலம் உயர்வான வாழ்க்கையை அமைக்க முடியுமா என்பது அவரது அறிவியலின் உள்ளடக்கத்தால் தீர்மானிக்கப்படுகின்றது. அதுமட்டுமன்றி உயர்வான வாழ்க்கைக்கு உறுதியளிக்கும் அறிவியல் எது என்பது வரையறுக்கப்படமுடியாததது. ஏனெனில் மனித நடத்தைகள் அவரவரது சிந்தனை, சொல், செயல் என்பவற்றால் வெளிப்படுத்தப்படுவதும் ஒவ்வொரு மனிதனும் தனித்துவமானவனாக இருப்பதால் அவர்களது சிந்தனை, சொல், செயல் என்பன ஒருவரில் இருந்து மற்றையவருக்கு வேறுபடுவதும் இயல்பானதாகும். அறிவியலின் பெரும்பகுதி ஏட்டுக் கல்விக்கான அடித்தளமாக அமைவதும் அந்த ஏட்டுக்கல்வி வாழ்க்கை பண்புகளின் வழிகாட்டியாக அமையாதிருப்பதும் 'ஏட்டுச் சுரக்காய் கறிக்கு உதவாது' என்ற கூற்றை நியாயப்படுத்துகின்றது. இதனால்தான் அறிவியல் ரீதியில் உயர்வான நிலையில் இருப்பவர்கள் வாழ்வியலில் உறுதியான உயர்ந்த வாழ்க்கையைக் கொண்டிருக்கிறார்களா என்பதை ஆராயும்போது இல்லை என்பது விடையாக அமைகின்றது. ஏனெனில் அறிவியலாளர்கள் ஒவ்வொருவருக்கும் உயர்வான வாழ்வு அமையுமாக இருந்திருப்பின் இன்று பல கோடிக்கணக்கானவர்கள் உள்ளடக்கப்பட்டிருப்பார்கள். பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியேறியவர்கள் அனைவருக்கும் அந்த வாய்ப்புக் கிடைத்திருக்க வேண்டும். ஆனால் நடைமுறையில் அவ்வாறு அமைவதில்லை.

இப்போது உறுதிப்படுத்தப்படக்கூடிய உயர்வான வாழ்க்கை எப்படிச் சாத்தியமாகும் என்ற கேள்வி உங்களிடம் தோன்றுவது நியாயமானதே. பணம், பொருள், புகழ், கல்வி என நாம் கருதும் அத்தனையும் உறுதிப்படுத்தப்பட்ட உயர்வான வாழ்க்கைக்கு அடிப்படையாக அமைய முடிவதில்லை என்பதும் வெளிப்படையாகிவிட்ட நிலையில் எது அந்த உயர்வான வாழ்க்கைக்கு உத்தரவாதம் அளிக்கமுடியும் என்பது சந்தேகத்திற்கு இடமின்றி விளக்குவது இந்தக் கட்டுரையின் உள்ளீடாகும்.

ஒரு உறுதியான உயர்ந்த வாழ்க்கைக்கு உத்தரவாதம் அளிக்கக்கூடிய ஒன்றே ஒன்று உயர்ந்தவர்களின் சேர்க்கையாகும். நாம் ஒவ்வொருவரும் நம்மால் எதிர்பார்க்கப்படும் வாழ்வியல் உயர்வுக்கு உயிரூட்டி நம்மை வழிப்படுத்தக் கூடிய அனுபவமும், பக்குவமும் தன்னலம் அல்லாத உழைப்பும் ஒத்துழைப்பும் கொண்டவர்களது நட்புத்தான் எமது உயர்வான வாழ்க்கைக்கான உத்தரவாதமாகும். நாம் ஒவ்வொருவரும் எந்த நிலைக்கு எம்மை உயர்த்த விரும்புகிறோமோ அந்த நிலையை அடைவதற்கு தமது அனுபவத்தை உயர்வான உள்ளத் தூய்மையுடன் எம்மோடு பகிர்ந்து எமது ஒவ்வொரு நகர்வையும் நெறிப்படுத்தக் கூடியவர்களது சேர்க்கையே எமது உறுதியான உயர் வாழ்க்கைக்கு உத்தரவாதமாகின்றது.

இப்போது இந்த உயர்வானவர்கள் யார்? இவர்களை எப்படி இனம்கண்டு கொள்வது எனப்பல வினாக்கள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் எழுவது தவிர்க்க முடியாததே. மனிதனது நடத்தைகளை அடிப்படையாகக் கொண்டு அவன் நல்லவனா கெட்டவனா எனத் தீர்மானிப்பதும் இலகுவானதல்ல. ஏனெனில் ஒவ்வொரு செயலுக்கும் அதற்கான காரணத்தை நமக்குச் சார்பாகத்தான் ஒவ்வொரு மனிதனும் கருதிக் கொள்கிறான். எனவே ஒருவன் தானாகச் செய்கின்ற விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நல்லவனா அல்லது கெட்டவனா எனத் தீர்மானிக்க முடியாது. ஆனால் ஒருவர் மற்றவர்களுடன் தொடர்பு கொள்ளும் போது அவனது நடத்தையை அடிப்படையாகக் கொண்டு கெட்டவன், நல்லவன், உயர்ந்தவன் என வகைப்படுத்த முடியும்.

**ஆம் வாசகர்களே!**

நீங்கள் கெட்டவரா, நல்லவரா, உயர்ந்தவரா என்பதைப் பின்வருமாறு பரீட்சித்துப் பாருங்கள். நீங்கள் மற்றவர்களைப் பற்றித் தாழ்வாக இன்னொருவருடன் உரையாடுவீர்களாக இருந்தால் கெட்டவர். காணி, வீடு, கார் எனப் பொருட்களைப் பற்றி மற்றவர்களுடன் உரையாடுவீர்களாக இருந்தால் நல்லவர். சிறந்த சிந்தனைகளை, மற்றவர்களை உயர்த்தும் சிந்தனைகளை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வீர்களாக இருப்பின் நீங்கள் உயர்ந்தவர். இந்தவகையான சிறந்த சிந்தனையாளர்களின் சேர்க்கையே நமது உறுதியான உயர்வாழ்வுக்கு உத்தரவாதமளிக்கின்றது. நமது உயர்வான சிந்தனைகளை நாம் பகிர்ந்து கொள்ளும் போது நம்முடன் இணைபவர்களும் உயர்வானவர்களே. இதுவே உறுதியான உயர்ந்த வாழ்க்கைக்கு ஒரேவழி.


அமைதியின் குரல் - Words of Peace

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹராஜி

1-877-707-3223 / தமிழில் - 416.431.5000

- MAHARAJI -

மஹராஜியின் உரைகள்

| On DVD | On TV |
| --- | --- |
| இலவச DVDக்கு அழையுங்கள் (416) 431-5000 1 877 707 3223 | Saturdays at 10:30 am<br>Rogers Cable Channel - 20<br>Bell Expressvu Channel - 219 |

# “இன்றைய பாடலாசிரியர்களுக்கு தங்கள் ஆளுமையை வெளிப்படுத்தும் படங்கள் இல்லை”

## நேர்காணல் - பாடலாசிரியர் பழநிபாரதி



பழநிபாரதி... புதிய தலைமுறைப் பாடலாசிரியர்களில் நம்பிக்கை அளிப்பவர். இதுவரைக்கும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாடல்களை எழுதியுள்ளார். அனைத்துமே தமிழர்களின் செவிகளில் பசுமையான நினைவுகளாக தங்கிவிட்டவை. பாடல்கள் தவிர கவிதை, சிறுகதை எனப் பன்முகத்துடன் இயங்கி வருகிறார். “விளம்பரம்” இதழுக்காக கோடம் பாக்கத்தில் இருக்கும் பழநிபாரதியின் அடுக்கு மாடிக் குடியிருப்பில் அவரைச் சந்தித்தோம்.

கேள்வி: “நீங்கள் முதல்முதலாக பாடல் எழுதிய படம் எது? அந்தப் பாடல் வெளிவந்தபோது உங்கள் மனநிலை எவ்வாறு இருந்தது?”

பழநிபாரதி: “இளமையின் விழிகளில் வளர்பிறைக் கனவுகள் பௌர்ணமிகிறதே மரங்களின் கிளைகளில் குயில்களின் சுரங்களில் சூரியன் மலர்கிறதே” - என்கிற என் முதற்பல்லவி ஒரு நள்ளிரவில் “பெரும்புள்ளி” படத்திற்காக சித்ராவின் குரலில் ஏ.வி.எம். ஒலிப்பதிவுக் கூடத்தில் பதிவானது. எஸ்.ஏ.ராஜ்குமாரின் இசையில் அந்த முதல் வாய்ப்பை எனக்கு நல்கியவர் இயக்குநர் விக்ரமன். கவிதையிலிருந்து பாடலுக்கு என்னை இடம் மாற்றிய அந்த அனுபவம் எனக்குச் சிறகு கட்டிவிட்டது. அந்த முதற்பாடல் படத்தில் இடம் பெறாதபோது அந்தச் சிறகு முறிந்தது. அந்தப் பாடலின் சன்மானமாக இயக்குனர் அளித்தது ஐநூறு ரூபாய். நான் முதன் முதலாகப் பார்த்த

**சந்திப்பு - சிவதானு**

ஐநூறு ரூபாய் நோட்டும் அதுதான். அந்த இரவில் தூக்கமே என் கனவாக இருந்தது.”

கேள்வி: “பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம், கண்ணதாசன் போன்றோர் காலத்தில் தத்துவப் பாடல்கள் எல்லா படங்களிலுமே இடம் பெற்றிருந்தன. இன்றைய சூழலில் அதுபோன்ற பாடல்கள் வருவதே இல்லையே, என்ன காரணம்?”

பழநிபாரதி: “தமிழ் வாழ்வியலின் எல்லா சூழ்நிலைகளுக்கும் ஏறத்தாழ கண்ணதாசன் எழுதிவிட்டார் என்றே நினைக்கிறேன். அவற்றைத் திரும்பிப் பார்க்கிற அனுபவமாகத் தான் இன்றைய திரையிசைப் பாடல்களை நான் அனுமானிக்கிறேன். அந்தப் பாட்டுப் பாதையை அவருக்கும் முன்னால் போட்டு நடந்தவர் பட்டுக்கோட்டையார். இன்றைக்கு வெளிவரும் திரைப்படங்கள் எல்லாமே காதல், காதல், காதலென்று காதலை மட்டுமே முன்னிறுத்து கின்றன. திரும்பிய பக்கமெல்லாம் காதலே ஒலிக்கின்றது. எனவே, “துலாபாரம்”, “பாசமலர்” போன்ற திரைக்கதைகள் என் முன்னோர்களின் ஆளுமையை வெளிக்கொணர்ந்தது போல், எங்கள் தலைமுறைக்கு வாய்ப்புகள் இல்லை. அப்படியொரு அமைவு தமிழ்த் திரை யுலகத்திற்குக் கிடைக்கிறபோது, இந்தத் தலை முறையின் ஆளுமையை வெளிப்படுத்தக் கூடிய கதவு திறக்கப்படலாம் எனக் கருதுகிறேன்.”

கேள்வி: “ரீமிக்ஸ் பாடல்களைப் பற்றி உங்கள் கருத்தென்ன?”

பழநிபாரதி: “தாத்தாக்களின் சட்டைகளைப் பேரன்கள் அணிந்துகொண்டு ஆடிப் பார்க்கிற ஆட்டம் அது. தாத்தாவின் அனுபவத்தைப் பேரன்கள் புரிந்துகொள்வதற்குக் காத்திருக்க வேண்டும். புராதனமான கோயில் வாசலில் புதிதாக முளைத்து ஒலியெழுப்பும் வளையல் கடைகளின் சங்கீதம் போன்றவை அவை.”

கேள்வி: “நாவல், சிறுகதை எழுதியுள்ளீர்களா?”

பழநிபாரதி: “கவிதை கடந்து யோசித்தது மிகக் குறைவு. ரஜேந்திரசோழனின் எட்டுக் கதைகளைப் படித்து அதன் பாதிப்பில் “தாய்” வார இதழில் ஒரு சிறுகதை ஒரு பக்கத்தில் எழுதியிருக்கிறேன். கண்ணதாசனின் பாதிப்பில் “கல்கி”யில் பூ விற்பவளைப் பற்றி ஒரு கதை எழுதியிருக்கிறேன். ஆனால், அந்த இரண்டு கதைகளும் அவர்களின் உயரங்களைப் பார்த்து அண்ணாந்து வியந்தபடி மணலில் எழுதிய கதைகளாக மறைந்து ஒளிந்துவிட்டன.”

கேள்வி: “தற்போதைய திரைப்பட பாடல்களின் போக்கு எவ்வாறு உள்ளது?”

பழநிபாரதி: “இன்றைய விமர்சர்களுக்குத் தீனியாக இருக்கிறது. லியோனி போன்ற பட்டிமன்றப் பேச்சாளர்களுக்கு வருமானமாக இருக்கிறது. நல்லதொரு திருப்பத்தை நோக்குகிற பாடல்களும் பிறந்துகொண்டுதான் இருக்கின்றன. திருவிழாவின் பேரிரைச்சலில் அந்த மெல்லிசையைக் கவனிக்கிற செவிகள் குறைவாகவே உள்ளன.”

கேள்வி: “கானா பாடல்களைப் பற்றிய உங்கள் பார்வை?”

பழநிபாரதி: “நாட்டுப்புறப் பாடல்களைப் போலவே கானா பாடல்களுக்குள் நகர்ப்புறத்தைச் சார்ந்த ஒரு கலாசார பரிவர்த்தனை ஒலிக்கிறது. அவை எதை முன்வைத்தாலும் அது அந்த மக்களின் மொழியாக - அனுபவமாக இருப்பதை புறந்தள்ளி விட முடியாது. குறிப்பாக அன்றாடம் உழைக்கும் அடித்தட்டு மக்களின் வாழ்வனுபவம்.”

கேள்வி: “உங்களைக் கவர்ந்த இசையமைப்பாளர் யார்?”

பழநிபாரதி: “எப்போதுமே இசைஞானி இளையராஜாதான். அவரது இசையில் போக்குவரத்தின் நெருக்கடியிலிருந்து ஒரு விடுதலையை, சுற்றுப்புறச் சூழ்நிலையின் புகைமூட்டத்திலிருந்து விலகி மேகங்களின் மிதத்தலை, உடலற்ற மனத்தின் தியானத்தை என நிறைய உணர்ந்திருக்கிறேன்.”

கேள்வி: “நீங்கள் சமீபத்தில் வாசித்த புத்தகம் எது?”

பழநிபாரதி: “அ. மங்கை தொகுத்த “தெயல் மணக்கும் பொழுது” என்கிற ஈழப் பெண் கவிஞர்களின் கவிதைகள், “சொல்லாத சேதிகள்” என்கிற சிறிய தொகுதியும் என்னை முதன்முதலில் ஈழப் பெண் கவிஞர்களின் அசலான குரலை அதே அதிர்வுகளோடு உணர வைத்தது. அதன் பிறகு இந்தத் தொகுதி வாழ்வு கேளிவிக்குறியாகிவிட்ட ஒரு யுத்த மண்ணில், மண்ணை விடவும் பெண் எவ்வளவு சேதப்படுகிறாள் - சிதைவுறுகிறாள் என்பதை வலிதுடிக்கப் பேசுகிறது. நம் தமிழகப் பெண் கவிகள் கற்றுக்கொள்ள அந்த ஈழக் கவிதைச் சகோதரிகளிடம் நிறைய இருக்கிறது. போரின் அழுத்தத்தில் ரஸ்ய இலக்கியத்தில் நிகழ்ந்த போக்கு, ஈழத்தின் அழுத்தத்தில் அந்தப் பெண்கவிகளிடம் நிகழ்ந்திருக்கிறது.”


**SAFETY TRUCKS**
**Training School Ltd.**
Training & Trucking Classes A, D & Z
In Classes
- 365 (Learning Permit)
- Log Books
- Air Brake (Z)
- Dangerous Goods
- Border Crossing
- Defensive Driving Course




20 Years Canadian Experience with Trucks

- தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும்.
- One On One Training
- அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும். வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.
- கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ் TRUCK DRIVING பயிற்சி இடம். (13 ஆம் ஆண்டு)
- We Accept Welfare & Unemployment Insurance
- வாரத்தில் ஏழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்.

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:
**YOGAN SOCKALINGAM**
Truck Driving போதனாசிரியர்
**905-793-9546 / 416-616-5979**
4 Wilkinson Road, 2nd floor, Brampton, ON L6T 4M3

# குறமகள் அவர்களுக்கு பவள விழா

## "யாழ். இலக்கிய வட்டத்தில் விமர்சனத்துறை வளர ஊன்றுகோலாக இருந்தவர்" - பேராசிரியர் நா. சுப்பிரமணியன் புகழாரம்

கடந்த 17.02.2008 மாலை கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் தலைவர் ஆர்.என். லோகேந்திரலிங்கத்தின் தலைமையில் திருமதி வள்ளிநாயகி (குறமகள்) இராமலிங்கம் அவர்களுக்கு பவளவிழா இடம்பெற்றது. திருமதி மொனிக்கா ஜேசுதாசன் குறமகளுக்கு மாலை அணிவித்தார். தமிழ் மொழி வாழ்த்து, கனடிய தேசியகீதம், அமைதி வணக்கத்தோடு ஆரம்பமான விழாவில் அனைவரையும் வரவேற்று உரையாற்றினார் செயலாளர் த. சிவபாலு. தொடர்ந்து கவிஞர் ஞானகணேசன் வாழ்த்துப்பா பாடிக் கையளித்தார். தொடர்ந்து தலைவர் ஆர்.என். லோகேந்திரலிங்கம் தலைமையுரை நிகழ்த்தும்போது நாம் எழுத்தாளர்களைப் பாராட்டுவதற்கு எப்போதும் பின்நிற்பதில்லை. அண்மையில் எழுத்தாளர் பூபதியவர்களையும் கௌரவித்திருந்தோம் என்ற அவர் திருமதி. வள்ளிநாயகி அவர்கள் பெண்ணியம் தொடர்பான எழுத்துக்களில் முன்நின்றவர். யாழ்ப்பாணத்தில் அவர் இருந்த காலகட்டத்தில் யாழ். எழுத்தாளர் வட்டத்தில் இணைந்து பல அக்கபூவர்வமான கருத்துக்களை முன்வைத்து வந்தவர். என்று குறிப்பிட்ட அவர் வாழும்போதே பாராட்டப்பட வேண்டும் என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு என்றார்.

## குமுளன்

தொடர்ந்து உபதலைவரும் இந்து கலாசார மன்றத்தின் தலைவருமான சின்னையா சிவனேசன் உரையாற்றும்போது நூல்களை எழுதினாலும் அதனை வாங்கி வாசித்து ஆதரவு தருபர்களின் தொகை குறைந்துவிட்டது என்ற ஆதங்கத்தைத் முன்வைத்ததோடு அவர் தொடர்ந்தும் எழுத வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

தொடர்ந்து திருமதி ஞானகி பாலகிருஷ்ணன் உரையாற்றும்போது அவர் பெண் எழுத்தாளர் என்று



குறிப்பிடுவதனை விரும்புவதில்லை. எழுத்தாளர் என்ற சமநிலை பேணப்படவேண்டும் என்பதில் மிகுந்த அக்கறை கொண்டவர். அவர் சமுதாயத்தின் பிரச்சினைகளை முன்வைத்துத் தனது படைப்புக்களை வைத்துள்ளார். சிந்தனைப் பூக்கள் எஸ். பத்மநாதன் உரையாற்றும்போது வள்ளிநாயகி அவர்கள் ஒரு தலை சிறந்த எழுத்தாளர். அவரை முன்னர் எனக்குத் தெரியாது ஆனால் நான் கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்குச் சென்றபோதுதான் அவரை நன்கு அறிந்து கொண்டேன் என்றார். துணிச்சல் மிக்க ஒரு எழுத்தாளர் என்றார்.

தொடர்ந்து கவிஞர் க. நவம் உரையாற்றும்போது குறமகள் தனது மனதில் பட்டதனை அப்படியே சொல்லும் தன்மை வாய்ந்தவர். அவர் தனியே இருப்பதனால் சுகவீனங்காரணமாக எங்கும் நடமாடமுடியாமல் இருக்கும் நிலையில் அவரோடு தொலைபேசியில் நாம் தொடர்பு கொண்டு அவரோடு உரையாடுவது அவருக்கு மன மகிழ்வைத்தரத்தக்கது என்றார். குறமகள், நான் மாணவனாக இருந்தபோதே எழுதத் தொடங்கியவர். அவரது எழுத்துக்கள் சமுதாயத்தை சீர்ப்படுத்தும் நிலையைக் கொண்டவை என்றார்.



தொடர்ந்து உரையாற்றிய தொலைக்காட்சி அறிவிப்பாளர் பி.விக்னேஸ்வரன் உரையாற்றும போது "எனது தாயாரோடு கல்வி கற்றவர். நான் சிறுவனாக இருந்தபோது அவரது படத்தோடு வெளியான கதைப்புத்தகத்தைப் பார்த்தபோது அவர்மீது எனக்கு அபார மதிப்பும் பற்றும் ஏற்பட்டது. பின்னர் அவர் நாடகவியல் கற்றதோடு மட்டுமன்றி வானொலிக்கு வந்து எங்களோடு பங்குகொண்டுள்ளார்" என்றார்.

பேராசிரியர் பாலசுந்தரம் உரையாற்றும்போது "பத்திரிகைகளில் வள்ளிநாயகி என்று கதைகள் வரும்போது மட்டக்களப்பில் உள்ள எனது உறவினர் ஒருவருக்கும் அதேபெயர் இருந்தமையால் நான் அவர்தான் எழுதுகின்றார் என்று நினைத்தேன். ஆனால் நான் பல்கலைக்கழகம் சென்றபின்னர்தான் இவர்தான் அந்த வள்ளிநாயகி என்பதனை அறிந்துகொண்டேன். அவரின் கதைகள் என்னை வசீகரித்துக்கொண்டன. எனது தமிழ் பணிக்கு அவரது எழுத்துக்களின் பங்களிப்பும் உதவியுள்ளது" என்றார்.

குரு அரவிந்தன் நான் அவரின் கதைகளைச் சிறுவயதில் இருந்தே வாசித்து வந்திருக்கின்றேன். எனது கதை குமுதத்தில் வந்தபோது அவர்



